# ஞானச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# ஞானச்சுடர்

வெளியிடுபவர் :

**திரு. இரா. இரவிச்சந்திரமோகன்**

திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : ஜூன் 1990

வெளியீடு:

சிவயோக சமாஜ பஜனை சங்கம்

திருகோணமலை.

Printed by ;

THE KUMARAN PRESS
201, Dam Street,
Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை :

இலங்கை சிவயோக சமாஜ தாபகராகிய ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தஜி சிறு வயதிலிருந்து சுவாமிகளுடன் நெருங்கிப் பழகுவதற்குப் பாக்கியம் பெற்ற சுவாமிகளின் ஒரு உத்தம பக்தை ஆகிய ஒருவர் சுவாமிகளின் சிறப்பு இயல்புகள், நற் பண்புகள், ஆத்மீக ஆற்றல், சுவாமிகளை நாடிவரும் அடியவர்களுடைய சரீர மனக் கிலேசங்கள் தன்னுடைய அருள் ஆசிகளால் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன. தூர தேசத்தில் இருக்கும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் எவ்வாறு அருள்பாலித்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர் என்பதையும், சுவாமிகளின் தீர்க்க தரிசன சிந்தனைகளும், அவருடைய அன்றாட வாழ்க்கை முறைகளும் எவ்வாறு இருக்கின்றன என்பதையும் அதி நுட்பமான ரீதியில் அனுபவ ரீதியாக இந்நூலில் விளக்கப்பட்டு இருக்கின்றன. சிவயோக சித்தராகிய இந்த மகா புருஷரைப்பற்றி அறியாதவர்கள் அறிவதற்கும், அறிந்தவர்கள் இன்னும் நன்றாக அறிவதற்கும் இந்த அரியநூல் நன்கு பயன்படும்.


**ராஜ் நாராயணபிள்ளை**


(சிவயோக சமாஜ பஜனை சங்கத்தின் தலைவர்)

திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமிகள் சிலவேளைகளில் சில நாட்கள் வனவாசம் செய்து வருவதுண்டு. ஒரு வன மத்தியில் பாறைக்கல் ஒன்றின்மீது சுவாமிகள் அமர்ந்திருப்பதை இப்படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச் சுடர்

கிடைத்தற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நாம் சதா சுக துக்கங்களின் வசப்பட்டு அஞ்ஞான உணர்வுடன் போராடிய வண்ணமே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றோம். வாழ்க்கையில் சுகமும் துக்கமும் மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது. நமது வாழ்க்கை பூர்வ ஜென்மங்களின் பயனுக்கேற்ப அமைந்து விடுகிறது. இயற்கையாக உள்ள இந்த நியதியை மாற்ற முடியாவிட்டா லும் அதனால் வரும் கஷ்டங்களை, துயரங்களை ஏமாற்றங்களை தாங்கிக் கொள்ளும் சக்தி எல் லோருக்கும் இருந்து விடுவதில்லை. இதற்கு படித் தவன், பாமரன், ஏழை, பணக்காரன், அறிஞன் எவரும் விதி விலக்கல்ல. அதற்கு வேண்டிய மனப் பக்குவத்திற்கு ஒரு ஆதாரத்தைத் தேடி அலையும் ஜென்மங்கள் கோடானகோடி என்றே கூறலாம்.

இத்தகைய போராட்டத்தின் மத்தியிலே பூர்வ புண்ணியத்தின் பயனாக திருமலையில் அமைந்த யோகாச்சிரமத்தை நாடி வருவோர் எண்ணிக்கை எண்ணில் அடங்காதது. இந்த ஆச் சிரமத்தை ஸ்தாபித்த பெருமையாக ஒரு ஞானப் பிழம்பு இந்த ஆச்சிரமத்தையே பிரகாசப்படுத்திக் கொண்டிருக்கிறது. காவி உடை, ஒளி பொருந்திய இரக்கமான கண்கள், எடுப்பான நாசி, விசால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான நெற்றி, வசீகரமான புன்னகை, கருணை ததும்பும் முக விலாசம், ஜென்ம சுமையை ஏற்று சுகமளிக்கும் மென்மலர்ப் பாதங்கள். சிறிய தோற்றத்தின் பெருமை நம் மனக்கண்களுக்கு அப்பாற்பட்டது. இத்தகைய தோற்றம் அங்கு வருவோரை கவர்ந்திழுத்து ஆசர்ஷித்துக் கொள்வதில் வியப்பில்லை. உண்மைப் பொருள் தன்னைத் தானே பிரகாசப்படுத்தி நிற்பதற்கு ஆச்சிரமம் சென்று வருவோரே சாட்சியாகும். தன்னை நாடி வருவோர்க்கெல்லாம் அவர்கள் மனப்பக்குவம் அறிந்து உபதேசித்து, சாந்தி அளித்து அல்லும் பகலும் ஓய்வின்றி உழைக்கும் எம்குருவின் பெருமையை அளவுகோலிட்டு கூறுவது சாத்தியமற்றதொரு செயல். எத்தனையோ விதமான மக்கள் இந்த சாந்தி தவழும் திருமுகத்தை தரிசிக்க காலநேரமின்றி ஓடோடியும் வருகிறார்கள். குழந்தைகள் முதல் பெரியவர்கள், இளைஞர்கள், பெண்கள், சாதாரண தொழிலாளிகள், பெரும் பதவி வகிப்பவர்கள், ஏழைகள், அறிஞர்கள், கல்விமான்கள், தேசத் தியாகிகள், அரசியல் வாதிகள் வரை இந்த ஞானியை நாடி வருகின்றார்கள். சாதாரண ஒரு சமயத் துறவியை இறை நம்பிக்கையற்ற நாஸ்திகன் நாட மாட்டான். சுவாமிஜியின் சந்நிதானத்தில் இதற்கு முற்றிலும் எதிர்மாறான செயலைக் காணலாம். இந்த மகா ஞானியைத் தேடி ஆஸ்திகனும் வருகின்றான், நாஸ்திகனும் வருகின்றான். தெய்வ பக்தி உள்ளவனும் வருகின்றான். இல்லாதவனும் வருகின்றான். ஒன்றுக்கொன்று முரண்பாடான திசைகள் இவை. அரசியல் வாதிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு கொள்கைகளை உடையவர்கள். கடுமையான விரோதமுள்ள மாறுபட்ட நிலையில் இருப்பவர்களும் இந்த ஞானியைத் தேடி வருகிறார்கள். அதனுடைய ரகசியம் தான் என்ன? ஒரு உத்தமமான தாய் தன் குழந்தைகளை அன்புடனும் பரிவுடனும் பராமரிப்பாள். அது மட்டுமல்ல. இன்னொரு தாயினுடைய குழந்தைகளை அவள் பார்க்கின்ற பொழுதும் அன்புடனும் ஆதரவுடனும்தான் அரவணைப்பாள். உலக மாதா போன்ற எம் அன்புக் குருவுக்கு எல்லோருமே மாறுபாடற்றவர்கள். சுவாமிஜியை நாடி வரும் பக்தரிடத்தில் ஜாதி, மத இன, வேறுபாடுகள் காணப்படுவதில்லை. சகல மதத்தவர்களும், சகல இனத்தவர்களும், மேல் நாட்டவர்களும் இந்த துறவியை நாடி வரும் பக்குவத்தைப் பார்க்கின்ற பொழுது அங்கிருந்து மிக உயர்வாக உள்ள ஏதோ ஒன்றை பெறுவதற்குள்ள காரணத்தினாலேயே அவர்கள் தங்கள் வரம்பை மீறி வருகிறார்கள் என்று கருத வேண்டும். இது மட்டுமல்ல தொழில் நிமித்தம் பேட்டி காணவரும் பத்திரிகையாளர்கள், பேட்டியாளர்கள் கூட தாம் வந்த வேலையை மறந்து தமது மனச்சுமை கூறி அருள் நிதியத்தைப் பெற்றுச் செல்வது ஆச்சரியமானதொரு செயல்.

சுவாமிஜியை சரணடைந்த பக்தர்கள் சுவாமிஜியிடம் முதன் முறையாக எந்தச் சந்தர்ப்பத்தில் அணுகினார்கள் என்பதை ஆராய்ந்தால் அவர்கள் சுவாமிஜியின் பெருமையை கேள்வியுற்றவர்களாக இருப்பார்கள். ஆத்மீக விடயங்களில் நாட்டம் கொண்டவர்களாக இருப்பார்கள். பல ஜென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களின் வழி வந்த கர்ம தோஷங்களினால் கஷ்டப்பட்டு விமோசனம் நாடி வந்தவர்களாக இருப்பார்கள். தம் குடும்பத்தில் நேர்ந்த இழப்புக் களினால் மனம் வெந்து ஆறுதலடைய வந்தவர் களாக இருப்பார்கள். வாழ்க்கையில் நிகழும் சம்ப வங்களுக்கு பரிகாரம் தேடி வந்தவர்களாக இருப் பார்கள். பூர்வ புண்ணியத்தின் வழியாக எதேச் சையாக சுவாமிஜியை தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்களாக இருப்பார்கள். எதிர்பாராமல் ஏற்படும் விபத்தினால் சுவாமிஜியை தரிசிக்கும் வாய்ப்பினைப் பெற்றவர்களாக இருப்பார்கள். யோக மார்க்கங்களை கடைப்பிடிக்கும் ஆர்வத் துடன் வந்து சரணடைந்தவர்களாக இருப்பார் கள். இப்படியாக எத்தனையோ சந்தர்ப்பங்களில் எம் குருவை தரிசிக்கும் பேறு பெற்றவர்கள் சுவாமிஜியின் பக்தர்கள்.

பல வழிகளிலும் தன்னை நாடி வரும் பக் தர்களுடைய மனோநிலைக்குத் தக்கபடி ஆத்மீக ரீதியாக,சாஸ்திர ரீதியாக,விஞ்ஞான ரீதியாக இப் பிரபஞ்சத்தின் சகல துறைகளிலும் ஏற்படுகின்ற போராட்டங்களுக்கு ஏற்றபடி விளக்கி தெளிவு படுத்தி புரிய வைப்பது சுவாமிஜியின் ஒரு தனி அம்சம். லௌகீக விஷயங்கள் என்று ஒதுக்கி விட மாட்டார். வாழ்க்கை சம்பவங்களின் நுணுக்கங் களை நன்கு தெரிந்து கொள்வார். தன்னை நாடி வரும் பக்தர்களின் பிரச்சனைகளுக்குரிய காரணங் களை விளக்கி அதற்கான பரிகாரத்தை இதமாகக் கூறி அவர்கள் மனச்சுமையை இலகுவாக்கிஅனுப்பி வைப்பார். அங்கு நிர்ப்பந்தமோ அதிகாரமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதில்லை. தம்மையேகதி என்று நம்பி நிற்கும் பக்தர்களுக்கு சுவாமிஜி தமது அனுபவ நிதியத்தை எப்படியாக அள்ளி வழங்கினார் என்பதனை அவருடைய பாதார விந்தங்களைப் பணிந்து நிற்பவர்கள் நன்கு அறிவார்கள்.

அவ்வப்போது ஏற்படும் கருமங்களில் கண்ணும் கருத்துமாக இருந்து அதற்குரிய பாவனையைப் பெற்று மறைமுகமாக பாடம் புகட்டி விடும் சுவாமிஜி துறவிகளில் மாறுபட்டவர். வயலில் இறங்கி விட்டால் தத்ரூபமான ஒரு விவசாயி. சேறு, சகதி, பனி, வெப்பமெல்லாம் அத்துப்படியான விசயங்கள். கட்டடத்துறையில் கடுமையான மேற்பார்வையாளன். ஆச்சிரமக் குழந்தைகளை நிர்வகிப்பதில் கண்டிப்பான பாதுகாவலன். ஆலய கருமங்களை நேரடியாக நின்று செயற்படுத்துவதில் பூரண தர்ம கர்த்தா. தொழிலாளர்களிடத்தில் வேலை வாங்குவதிலும் ஊதியம் வழங்குவதிலும் கண்டிப்புள்ளவர் மறு நிமிடம் பசி பட்டினி அறிந்து இடது கை அறியாமல் வாரி வழங்குவதில் கொடை வள்ளல். எடுத்த கருமத்தை செய்து முடிப்பதில் திட சித்தமுடையவர். சமுதாயத்தில் காணும் குறை குற்றங்களை உடைத்தெறிந்து தர்ம நெறியுடன் பரிகாரம் கூறுவதில் துணிவு மிக்கவர். கருமத்தில் சிரத்தை பிசகி விட்டால் ருத்ர தாண்டவம். திருக்கரங்கள் பட்டுச்சமைத்த உணவு தேவாமிர்த பிரசாதம். அன்புடன் அரவணைப்பதில் தாயின் கருணை. உடற் பிணி போக்குவதில் வைத்தீஸ்வரன். இசைத்துறையில் விற்பன்னர். பாடல்கள் புனைவதில் மகா மேதை. அருளுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குகையில் பழுத்த ஞானி. மன மகிழ்வுடன் கொடுப்பதில் பரிபூரண நிறைவுடையவர். திருக் கரங்கள் தொட்டதெல்லாம் சித்திப்பதில் ஸ்பர் ஸக மணி. இன்னும் எத்தனை எத்தனையோ கரு மங்களில் அந்தந்த பாவனை பெற்று உபதேசித்து நிற்கும் குரு துறவிகளில் வேறுபாடானவர். ஒரு ஞானாசிரியருடைய கடமையாக தமது போதனை களுக்கும் பயிற்சிகளுக்கும் தாமே எடுத்துக் காட் டாக விளங்குவார். சத்திய சொரூபனான கிருஷ் ணரே சத்தியம் பண்ணிய நோக்குத்தான் அவரு டைய பாவனைகளில் புலப்படும்.

ஆத்மீக நாட்டம் கொண்ட எத்தனையோ பக்தர்கள் பல இடங்களுக்கும் சென்று தம் உள் ளத்தில் எழும் கேள்விகளுக்கு எங்குமே திருப்தி யான பதில் கிடைக்காமல் சுவாமிஜியின் பாதார விந்தங்களை அணுகுவதுண்டு. எத்தனையோ கரு மங்களுக்கிடையிலும்முகமலர்ச்சியுடன்காத்திருந்து அவர்களுடைய ஆத்மீக தாகத்தை தீர்த்து விடு வார். அங்கிருந்து கிடைக்கும் திருப்தியான பதிலும் அன்பின் கனிவும் திரும்பத் திரும்ப சுவாமிஜியின் தரிசனத்திற்காக ஏங்கி நிற்கும் நிலையை அவர் களுக்கு கொடுத்து விடுகிறது. தன் பக்தர்களுக்கு உபதேசிக்கின்ற பொழுதாயினும்,அவர்கள் வாழ்க் கையை நெறிப்படுத்தும் பொழுதாயினும், பிரச் சினைகளுக்குரிய வழி வகைகளை கூறும் பொழு தாயினும் புலித்தோலில் இருந்து கண்மூடித் தியா னித்து கூறுவதில்லை. உபதேசிக்கின்ற முறையி லும் ஒரு விசேஷம். எப்பொழுது அந்த ஹ்ருதய கமலத்திலிருந்து வெளி வருகின்றதோ அது எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பமாக இருந்தாலும் சரி அது தான் சுவாமிஜியின் உபதேசம். அது தான் சுவாமிஜியின் ஆத்மீக பரிபாஷை. புரிந்து கொள்ளும் பக்தர்கள் விளங்கிப் பலனடைவர். அத்தகைய உபதேசம் நடந்து கொண்டு பேசுவதாகவும் இருக்கலாம். உட்கார்ந்துகொண்டு பேசுவதாகவும் இருக்கலாம். சமைத்துக் கொண்டு கூறுவதாகவும் இருக்கலாம். வெளியே புறப்படும் சமயமாகவும் இருக்கலாம்.

சில சமயங்களில் நம் குரு அடக்கமாக இருந்து சில சம்பவங்களால், பல தத்துவங்களால், உவமானங்களால், உபதேசங்களை இலகுவாக வெளிக் கொணர்ந்து தத்ரூபமாக விளக்குவார். பிரச்சாரங்கள், வகுப்புக்கள், பிரசங்கங்கள் இவற்றினாலன்றி அவரிடத்திருந்து ஒழுகிக் கொண்டிருக்கும் சைதன்ய சக்தி ஒன்றே அனுபவத்தில் போதனையைப்புகட்டி விடும். அற்புதங்களைப்படைத்து விடும். இது மட்டுமன்றி அன்பாகவும், ஆதரவாகவும், விளையாட்டாகவும் கூட அனுபவ ரீதியில் புகட்டுகின்ற அழகு நம் குருவின் தனித்துவமான விசேஷ அம்சமாகும். சுற்றாடலில் காணப்படும் சர்வ சாதாரண அன்றாட சம்பவங்களை கவர்ச்சியுடையதாக்கி அதன் சத்திய உண்மைகளை தர்மத்தின் அடிப்படையில் அமைதியாக உணர்த்தி விடுவார் நம் குரு. அவற்றில் சில உடனுக்குடன் மனத்தளவில் பதிந்து விடும். சில சிறிது நாட்களின் பின்பு தான் சிந்தனையைத் தூண்டி விடும். சில காலம் தான் பதிலளிக்கும்.

மனிதர்களுடைய ஜென்ம ஜென்மாந்தரங்களில் ஏற்படும் பாபங்களுக்கு விமோசன மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தை கூறுவதற்கும், மனிதனுடைய வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கும், புனிதப்படுத்துவதற்கும் வேதங்கள் புராணங்களினின்றும் எடுத்துக்காட்டி இலகுவாக அதன் சாற்றைப் பிழிந்து ஞானரசமாக வழங்குவார் நம் குரு, அத்தகைய அருளுரைகளை கேட்கும் புண்ணியப்பேறு சில பக்தர்களுக்குக் கிட்டியிருக்கிறது. எந்த நிலையிலும் தருமத்தை விடாமல் கடைப்பிடித்து, எத்தனை இன்னல்கள் வந்த பொழுதும், வனவாசம் சென்ற சமயமும் அவற்றைக் கடந்து சென்ற ஸ்ரீராமனின் மேற்கோளை வாழ்க்கையின் போராட்டத்திற்கு உதாரணமாக எடுத்துப்புரிய வைப்பார் சுவாமிஜி. எல்லா ஐசுவரியங்களும் பெற்று சிறந்து விளங்கிய இராவணன் தர்மத்தை கைவிட்டதனால் அழிய நேரிட்ட சம்பவத்தையும் அழகாக வாழ்க்கைச் சம்பவங்களுடன் கூடி இராமாயணத்தை இழையோடி விளக்குவார் நம் ஞான குரு. பல சந்தர்ப்பங்களில் சுவாமிஜி கூறும் கதைகள் சிறுவர்களுடைய உள்ளத்தில் மட்டுமல்ல பெரியவர்களுடைய மனதிலும் சிந்தனையைத் தூண்டி விடும். வாழ்க்கையின் தத்துவங்களையும், பக்குவ நிலைகளையும், ஆத்ம போதகத்தையும் அவர் கூறும் கதைகள் உணர்த்தி விடும். அது மட்டுமல்ல. இரண்டு நிமிடத்தில் கூறி இரண்டு நிமிடத்தில் கேட்டாலும் அவற்றின் பொருள் விளங்க இரண்டு ஆண்டுகள் போதாது. ஆண்டுகள் பல செல்லும்.

சுவாமிஜி அவர்கள் சத்சங்கம் போன்ற சந்தர்ப்பங்களில் அருளுரைகள் வழங்குகின்ற சமயத்தில் முத்துத் தெறித்தது போன்ற சொல்வன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், பிறரை மயக்கக்கூடிய பிரசங்க சக்தியும், தொனியின் கம்பீரமும், இடையறாது ஒழுகி வரும் பேச்சாற்றலும் சுவாமிஜியின் தனித்தன்மை யாகக் காணப்படும். குழந்தைகள் முதற்கொண்டு அங்க அசைவின்றி கிரகிக்கும் காட்சி நம்மை எல்லாம் ஆச்சரியத்தில் ஆழ்த்தும். அந்தப் பச் சிளம் குழந்தைகளுக்கு புரிகிறதோ இல்லையோ அங்கிருந்து வரும் சொற்தெறிப்பில் கட்டுண்டு போய்க் கண் இமைக்காது சுவாமிஜியை பார்த்த வண்ணமே இருப்பார்கள். ஒரு குழந்தை நற் பண்புகளோடு நல்ல சுபாவங்களோடு ஒரு நல்ல பிரஜையாக வளர்த்து எடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோர்களிடமே தங்கியிருப்பதை அழகாக எடுத்துக் கூறுவார். ஒரு அவதார புரு ஸர் எனத் தெரிந்தும் யசோதை தன் குழந்தை யான ஸ்ரீ கிருஷ்ணரை அன்புடனும், கண்டிப்புட னும் வளர்த்தெடுத்த சம்பவங்களை பல தடவை கள் அருளுரைகளில் கூறுவதுண்டு. ஒரு குழந்தை யின் வளர்ச்சியில் நவநாகரீக சம்பிரதாயங்க ளுக்கு கட்டுண்டு செய்யும் விழாக்கள், உபசாரங் களை சுவாமிஜி அறவே விரும்புவதில்லை. அது ஒரு தனி மனிதனை கீழ் நோக்கிப் பாதாளத் திற்கு கொண்டு செல்லும் செயல்களாக கண் டித்து தன் உரையில் பக்தர்களுக்கு சுவாமிஜி வெளிப்படுத்துவார்.

ஒரு குடிப்பழக்கமுள்ள பக்தன், தன்னை அணுகுகின்ற பொழுது அந்தத் தீய பழக்கத்தை விட்டு விடுங்கள் என்று ஒரு பொழுதும் கட்டா யப்படுத்தி தனது கருத்தைத் திணிப்பதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் குரு. நீங்கள் அடியோடு விட்டு விட வேண்டாம். நன்றாகக் குடியுங்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்ளலாம் என்று பதமாகக் கூறுவார். அவருடைய பலாத்காரமற்ற இதமான பேச்சிலேயே மனம்மாறி நம்பமுடியாத அளவிற்கு தமது தீய பழக்கத்தை விட்டுவிடுவார்கள். எந்தவித மாயாஜாலங்களாலும் மந்திர வித்தைகளினாலும் இந்த மாற்றங்கள் ஏற்பட்டவையல்ல. அவர்கள் தாமாகவே தம்மை மாற்றி அமைத்துக்கொள்வதுதான் இங்கு நாம் காணுகின்ற அனுபவ சித்து. இன்றைய உலகில் பலதரப்பட்ட தீய பழக்கவழக்கங்களுக்கிடையில் அதிலிருந்து விடுபடும் அளவு ஒரு குடும்பத்திற்கு, சமுதாயத்தில், நாட்டிற்கு செய்யும் ஒரு பெரும் சாதனை என்றே அதனைக் கூறலாம். சுவாமிஜியை தரிசிப்பதற்கு வருபவர்கள் மது அருந்தியவர்களாக இருந்தாலும் சரி, புலால் உண்பவர்களாக இருந்தாலும் சரி அவர்களுடைய பக்திக்கும், அன்புக்கும் கட்டுண்டு அன்புடன் அணைத்து நடந்து கொள்வார். மதுபோதையிலும் கூட அவர்கள் தாம் குருவின் மேல் வைத்துள்ள பக்தியினின்றும் வழுவாது தம் குருவின் திருப்பாதங்களை வாரியணைத்து வணங்கி நிற்கும் பக்தியின் உயர்வை சுவாமிஜி அவர்கள் மனம் கசிந்து நோக்குவதுண்டு.

தன் பக்தர்கள் தன்னைத் தெய்வமாகக் கண்டு வணங்கும் அதே வேளையில் பேரன்புக்குரியவராகவும் காணப்படுவார். தாய், தந்தை ஆசிரியன் போன்று அன்புடன் சகஜமாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்புடனும் காணப்படுவார். சிநேக பாவத்துடன் மதுரமாகக் குழைந்து பேசி ஆத்மீகப் பயிற்சிகளை மிக எளிமையாக அளித்து விடுவார் சுவாமிஜி. குரு என்ற நிலையில் தன் பக்தர்களிடத்தில் எதையும் அடக்கித் திணிப்பதில்லை. நிர்ப்பந்தமாக எதனையும் புகுத்துவதுமில்லை. அவரவர் சுதந்திரத்தைக் குலைக்காமல் அவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கு ஏற்றபடி அவர்கள் பக்கமே சார்ந்து உயர்வாகப் பேசி, உற்சாகமளித்து பக்குவமாக அதன் உள்ளார்த்தங்களைப் புரிய வைப்பதில் சுவாமிஜிக்கு நிகர் வேறில்லை. கொதித்த உள்ளமும் குளிர்வடைந்து அதன் முடிவை ஏற்று மனச்சலனமின்றி அவ்விடத்தை விட்டு சாந்தியுடன் வெளியேறும்.

தன்னை நாடி வரும் பக்தன் தூரத்தில் வருகின்றபொழுதே இந்த மெய்ஞானியின் ஞான திருஷ்டியினால் அவன் வருகின்ற நோக்கத்தை தெளிவாகத் தெரிந்து, நெருங்கியதும் வந்த விஷயத்தை தாமே கூறி, அதற்குரிய வழி வகைகளை அல்லது அதன் பரிகாரத்தை விளக்கி ஆச்சரியத்தில் ஆழ்த்திவிடுவார். கண்ணாடிப் பேழைக்குள் இருக்கும் பொருள் தெளிவாகத் தெரிவது போன்று சிஷ்யர்களின் மனக் கிலேசங்களைக் கேட்டறியாமலே தெரிந்து அதற்குத் தக்கபடி பதமாகக் களைந்துவிடுவதில் அபூர்வமான துறவி அவர். சர்வசராசரங்களின் அதி சூக்கும அசைவிலும் தங்கி நிற்கும் ஞானிக்கு இதில் அபூர்வம் என்றெண்ண என்னதான் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜென்ம ஜென்மாந்தரமாக தொடர்ந்து வரும் தன் பக்தனுடைய மிகக் கடுமையான பிரச்சனைகளை தாம் ஏற்றுவிட்டால் தன் பலம் வாய்ந்த சக்தியை விரயம் செய்து அப்பொறியினின்றும் இழுத்தெடுத்து விமோசனமளித்து விடுவார். கருமம் நிறைவெய்தியதும் அதில் எந்த வித பெயர் புகழ்ச்சியையும் வேண்டாதவராக அடுத்த கருமத்தில் மூழ்கிவிடுவார். தன் சக்தியை வெளிப்படுத்திக் காட்டும் முயற்சியில் சிறிதளவும் பற்றற்று அடக்கத்துடன் எளிமையாக இருந்து விடுவார். இந்த மகான். தன் பக்தர்களிடத்தில் ஆத்ம போதனைகளை புகட்டுகின்ற பொழுதாயினும் சரி, பிரச்சனைகளுக்குரிய பரிகாரங்களை கூறியபொழுதாயினும் சரி, அவர்கள் அதனைக் கருத்தில் எடுத்துக்கொண்டார்களா அல்லது கூறியவற்றைக் கேட்டுச் செயல்படுத்துகின்றார்களா என்று ஒருபொழுதும் காத்திருப்பதில்லை. அத்துடன் தன்னால் அளிக்கப்படும் ஆறுதலுக்கோ அன்றி தன் தப சக்தியினால் தீர்க்கப்பட்ட கடும் பிரச்சனைகளுக்கோ பிரதி உபகாரமாக எதனையும் அவர்களிடத்திலிருந்து வேண்டியும் காத்திருப்பதில்லை. தன்னைத் தரிசிக்க வரும் பக்தர்களிடத்திலிருந்து கூட அவர் அன்புடன் வழங்கும் பொருட்களைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிடும் அதிசயமான துறவி நம் சுவாமிஜி. சில சமயங்களில் அவர்களுடைய பக்திக்கு கட்டுண்டு அப் பொருட்களை ஏற்றுவிட்டால் சில தினங்கள் பக்தனுடைய மன மகிழ்ச்சிக்காக, அதற்குரிய இடத்தில் அழகாகக் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடவர்க்கத்தில் ஒருவருக்கொருவர் வேறு பட்ட மனப்பாங்குடையவர்களாக காணப்படு வது இயற்கை. சுவாமிஜியை நாடி நிற்கும் பக் தர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. மனிதர்களுக்குள்ள குணங்கள்தான் எத்தனை வகை. கோபம், கொடூரம், முட்டாள்தனம், அகங் காரம் இன்னும் எத்தனையோ குண இயல்புடைய வர்கள் சுவாமிஜியை அணுகிய போதிலும் மகு டிக்குக் கட்டுண்ட நாகம் போன்று அன்பே உரு வான திருவுருவத்திற்கு முன் அடங்கிப் பணிந்து நிற்பர். சர்வமும் ஒடுங்கிய நிலையில் சாந்த சொரூபமாக காட்சியளிப்பர். மதம் பிடித்து அலையும் மத யானையை அடக்கித் தன்வசம் இசைவாக எடுக்கின்ற பொழுதுதான் ஒரு மிகச் சிறந்த பாகனுக்குரிய பெருமையை அவன் அடை வதாக நம் குரு கூறுவதுண்டு. அதுபோன்று தன் கருணையினால் மனித வர்க்கத்தின் அகங் கார மமதையை அடக்கித் தன் வசப்படுத்தி விடுகின்ற செயல் நம் குருவின் பெருமைக்கே சிகரம் வைத்தது போன்று அமைந்துவிடுகிறது. இந்த உலகத்தில் யாருக்கும் அடிபணியாத, தலை வணங்காத சில ஜென்மங்கள் கூட புலன்கள் எல் லாம் அடங்கி. ஒடுங்கி நிற்பதைக் காணக்கூடிய இடம் இந்தத் துறவியின் ஆச்சிரமம். பெரும் பதவி வகிப்போர், செல்வந்தர்கள் கூட சுவாமி ஜியின் இணக்கத்தில், சத்சங்க சகவாசத்தால் காலாகாலத்தில் தமது முரட்டுத் தன்மையினின் றும், அகங்காரத்தினின்றும் விடுபட்டுவிடுகிறார் கள். தம் துர்க் குணங்களினின்றும் விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு விடுகின்றார்சள். தமது சுபாவத்தினின்றும் இறங்கி வந்து ஏனையோருடன் சம பாவனை யுடன் பழகுவதற்கு தம்மை தயாராக்கிக் கொள் கின்றனர். சுவாமிஜியின் பக்தர்களையும் தம் குடும்ப உறுப்பினராக கருதி ஒருமித்து நின்று தொண்டுகள் புரிவதை குரு பணியாக நினைத் துச் செய்கின்ற அளவுக்கு தூண்டப்படுகிறார்கள். பக்தர்களுடைய மனம் விசாலமடைந்து தன்னை கதியாக நம்பி இருக்கும் பக்தனுக்கு சுவாமிஜி எப்பொழுதும் அண்மித்த வண்ணமே காட்சி கொடுக்கின்றார். அவர்களில் உயர்ந்தவன் தாழ்ந் தவன், ஏழை, பணக்காரன், தொழிலாளி என்ற பேதமில்லை.

மனிதனாகப் பிறவி எடுத்தவர்கள் பல்வேறு பட்ட சுபாவங்களையும் ஆற்றலையும் பெற் றிருந்த போதிலும் அவர்களின் சுபாவ குற்றங் களைக் கண்டு சுவாமிஜி ஒதுக்குவதில்லை. அவர் கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஒளிந்து நிற்கும் திறமைகளைத் தெளிவாகத் தெரிந்து அவரவர் களுக்குரிய பணிகளைக் கொடுத்து பல்வேறு கருமங்களையும் கஷ்டமின்றி இலகுவாகச் சாதித்து விடுவார். ஒரு கருமத்தை செயற்படுத்தத் தன் னைச் சரணடைந்தவர்களிடத்தில் தாழ்மையாக இதமாகக் கேட்கும் அனுசரணை அவன் மலை யையே புரட்டி வந்துவிடுகின்ற ஆத்ம பலத்தை வழங்கிவிடுகிறது. எத்தகைய திறமை, படிப்பறிவு ஆற்றல், செல்வாக்கு. இருந்தபோதிலும் ஒருவ னுடைய இருதய சக்தியில்தான் செயலினுடைய வெற்றி தங்கியிருக்கின்றது என்பதை பல சம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களில் தம் சிஷ்யர்களுக்கு உணர்த்தாமல் உணர்த்திவிடுவார் சுவாமிஜீ.

நிமிடத்துக்கு நிமிடம் எம் அன்புக் குருஜி செய்துகொண்டிருக்கும் கருமங்கள் ஒன்றுக் கொன்று எதிர் திசையாகவே இருந்து கொண் டிருக்கும் துன்பங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் ஆறுதலும், பரிகாரமும் தேடி வரும் ஏராளமான பக்தர்களின் கஷ்டங்களும் பிரச்சனைகளும் வெவ் வேறு திசையில் சம்பந்தப்பட்டிருக்கும். அத்தகைய நிலையிலும் வேற்றுமையில் அன்னியோன்னிய செயலைத்தான் நம் குருவிடத்தில் காணமுடியும். தன் பக்தர்களின் வேறுபட்ட பிரச்சனைகளை ஒன்றுடன் ஒன்று கலக்காதபடி ஒரே சமயத்தில் ஒவ்வொன்றாக தனித்தனியாக அதனுடன் ஒன்று பட்டு நின்று பரிகாரம் கூறுவார். தன் ஆத்ம சக்தியைச் செலவிடும் அந்த மகத்தான நேரத் திலேயே அவர்கள் பிரச்சனைகள் தீர்ந்து மன ஆறுதலுடன் அம் மகானின் இருப்பிடத்தை விட்டு செல்வார்கள். தன் பக்தர்களுக்கு சாந்தி அளிக் கும் அதே வேளை தன் உணவையும் தயாரித்துக் கொள்வார். ஆச்சிரம அலுவல்களையும் கவனித் துக்கொள்வார். ஆலய விசயங்களையும் கருத் துடன் செயற்படுத்துவார். வயல் கருமங்களையும் கவனத்துக்கு எடுத்துக்கொள்வார். இப்படியாக எத்தனையோ கருமங்களில் வேற்றுமையில் அன்னி யோன்ய பாவத்தை எம் குருவிடத்தில் காண லாம். ஒரு பயணத்தை மேற்கொள்ளும் சமயத் தில் கூட இத்தனை கருமங்களுக்கும் செய்ய வேண்டியவற்றைச் செய்த பின்பு சுதந்திரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுடன் தான் வாகனத்தில் ஏறிக்கொள்வார். சுவாமிஜி பயணம் சென்ற இடத்திலிருந்து கொண்டு இங்குள்ள கருமங்களுக்கு கட்டளை யிடக் கூடியவாறு எதுவும் சம்பவிப்பதில்லை. அதன் சிந்தனையே தேவையில்லாத விதத்தில் முன்கூட்டியே கருமங்களில் கண்ணாக நின்று செயற்படுத்திவிட்டுச் சென்றிருப்பார் அந்த சுதந்திர புருஷர். கடுமையாக வேகத்தில் செய்கின்ற கருமங்களையும் தன் உடல் நலனையும் பொருட்படுத்தாது கருமங்களைச் செயல் படுத்தும் முறையையும் பார்க்கின்றபொழுது அற்புதமாகத் தான் இருக்கும்.

கருமங்களை மிகவும் இலகுவாக செயல் படுத்துகின்ற பாங்கில் ஒரு தனித்தன்மையே காணப்படும். மிகவும் சுறுசுறுப்பின் நடுவே மிக்க ஓய்வையும் மிக்க ஓய்வின் நடுவேசுறு சுறுப்பாகவும் காணப்படுவார்.

தனது போதனைகளுக்கும் பயிற்சிகளுக்கும் தாமே எடுத்துக்காட்டாக விளங்குவார் சுவாமிஜி. ஒரு பொருளை ஒருவருக்கு கொடுக்கின்ற பொழுதிலும் நல்லவற்றையே தேர்ந்தெடுத்துக் கொடுப்பார். அது யாராயிருந்தாலும் சரி தனக்கு பழுதுபட்டதாகத் தெரிந்தால் அது மற்றவர்களுக்கும் பயன்படாதபடி விலக்கிவிடுவார். ஒரு சிறு பொருளை மற்றவர்களுக்கு கொடுக்கும் பொழுது கூட சுத்தமாகவும் அழகாகவும் காகிதத்தில் மடித்து கொடுக்கும்பொழுது அவருடைய புனிதத்தையும் பரிசுத்தத்தையும் பிரதிபலித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும். ஒருவரிடத்தில் அடுத்தவர்களைப்பற்றி கூறுகின்ற பொழுது அவர்களில் இருக்கும் நல் இயல்புகளையே உயர்வாக எடுத்துக் கூறுவார். நல்லவற்றையே கொடுத்து நல்ல செயல்களைச் செய்து நல் இயல்புகளையே கூறுகின்றபொழுது ஒரு ஞான ஆசிரியனுடைய வழிகாட்டும் தன்மை தான் பக்தர்களுக்கு எடுத்துக் காட்டுகிறது. இத் தனைக்கும் மேலாக மிக உன்னதமாகத் துலங்கி நிற்கும் ஒரு தனித்தன்மையை கூறாமல் இருக்க முடியவில்லை. சுவாமிஜியின் தோற்றமோ அந்த தரிசனத்தை விட்டுச் செல்ல முடியாத ஆகர்ஷண சக்தி வாய்ந்த ஒரு அற்புதத் தோற்றம். பேசு கின்றபொழுது கனிவுடன் கூடி கீழ் சுருதியில் கேட்கும் இதமான தொனியின் குழைவு உள்ளக் கசிவையே உண்டுபண்ணும். திரும்பவும் அத் திரு நா மலராதா என்றிருக்கும். தன் பக்தர்களின் பெயர்களைக் கூறி அழைக்கின்ற பொழுதே உலக துன்பங்களை மறந்துவிடும் கனிவு அதில் தோன் றும். இத்தனைக்கு மத்தியிலும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அந்தந்த இடத்தில் அடக் கத்துடன் பணிவாக நின்று கொள்ளக் கூடியவாறு வைத்திருக்கும் ஒரு செயலை ஆச்சரியமான தொன்றாகவே கருத வேண்டும். இதற்கு மேலும் விளக்கி கூறுவதற்கில்லை. கண்டிப்பு என்ற பேச் சிற்கும் அங்கு இடமில்லை. சிவயோக சித்தகலை கண்ட சித்தர்களின் சிறப்பான குணம் என்று கருதுவதுதான் சாலச் சிறந்தது. எவ்வளவுதான் நெருங்கிப் பழகியிருந்தாலும், எவ்வளவுதான் சிநேக பாவத்துடன் பழகியிருந்தாலும், எவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அவரது அனுக்கிரகத்தைப் பெற்றிருந்தா லும் ஒவ்வொரு தடவையும் சுவாமிஜியை தரிசிக் கும் பொழுதும் பக்தர்கள் மனதில் ஒரு பயம் கலந்த ஒரு பக்தி தோன்றுவதை யாராலும் மறுக்க முடியாது. ஒரு மகா புருஷரின் வசீகரம் தான் அதன் ரகசியம்.

சுவாமிஜி அவர்களினால் இயற்றப்பட்ட பஜனைப் பாடல்களிலும், எழுதப்படும் கட்டுரைகளிலும், எம் குருவினால் வழங்கப்படும் அருளுரைகளிலும் இறைவனைப்புகழ்ந்து கூறிக்கொண்டிருக்கும் வழமையான சம்பிரதாயம் மிக மிக அரிதாகவே காணப்படும். அவை இறைவனுடைய புகழை மட்டும் கூறுபவையாக இருப்பதில்லை. தனி மனிதனை ஒவ்வொருவனுக்கும் கூறப்பட்டவையாகத்தான் இருக்கும். அவரவர் மனப்பாங்குக் கேற்ப மன அழுக்காறுகளை, தீய வாசனைகளை சுபாவ குற்றங்களை அகற்றி மனச் சுத்திகரிப்பை இறைவனிடம் வேண்டிக் கேட்கும் பாங்கில் அமைந்திருக்கும், பிரார்த்தனை, சத்சங்கம, ஆலய வழிபாடு இத்தகைய சற்கருமங்களெல்லாம் லௌகீக தேவைகளுக்கான வேண்டுதல்களாக மட்டும் இருக்காது. அவரவர் தம்முள்ளே இருக்கும் தீய குணங்களை நீககுவதற்குமாக இருக்க வேண்டுமென்பதுதான் சுவாமிஜினுடைய சித்தாந்தம் எதனையும் சொல்லாமல் சொல்வதைவிட அனுபவத்தினால் உணர வேண்டும். இறை சுகத்தை சுவைக்க வேண்டும். அதில் மனம் ஒள்றியிருக்க வேண்டும் என்ற பெரும் பங்கு எதிலும் தோன்றும். அவரவர் சுபாவ மாற்றத்தினால் ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த நிலையை எய்தக் கூடிய நம்பிக்கை சுவாமிஜியின் கருத்துக்களில் பிரகாசிக்கும். எம் குருவினால் வழங்கப்படும் சத்சங்க அருளுரைகளில் ஒரு மனிதன் மனிதப் பண்புகளோடு கூடி எப்படி இருக்க வேண்டும், அவனுடைய சுபாவ குற்றங்களை எந்த ரீதியில் மாற்றி வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் விளக்கப்பட்டிருக்கும். ஆத்ம ஞானத்தை அடைய தாகமுள்ள ஒருவன் அதற்கு முன் இல்லற தர்மத்தை சரியாக நெறிப்படுத்தி வாழ வேண்டும். அதற்கு பின்புதான் அவன் ஈஸ்வர தரிசனத்துக்கு ஆளாக முடியும் என்பது சுவாமிஜியின் கருத்து. இந்த ஞானி கூறுகின்ற விளக்கங்களெல்லாம் அனுபவத்துடன் சாஸ்திரங்களை விளக்கித் தெளிவு படுத்தப்பட்டவையாயிருக்கும். சுவாமிஜியினால் எழுதப்படும் வாசகங்களில், பல நூல்களில் பல பக்கங்களைப் புரட்டி அலசி ஆராய்ந்து விடை கிடைக்கும் கேள்விகளுக்கு இரண்டே வரிகளின் அடக்கத்திற்குள் அதன் பொருள் அடங்கியிருக்கும். பல சமயங்களில் பெரும் கல்விமான்களே இதனை வியந்து கூறுவதுண்டு. அந்தளை அழகாகவும், சுருக்கமாகவும் இன்றைய தேவைகளின் அத்தனை போராட்டங்களுக்கான பதிலும் அதில் காணப்படும். மதம், கல்வி, ஆலயம், அரசியல், ஞானம் இப்படியாகவுள்ள எல்லாத் துறைகளுக்கான விளக்கங்களும் சுவாமிஜியின் வாசகங்களில் பேதமின்றிக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி அவர்களால் இயற்றி இசையமைக்கப்பட்ட பஜனைப் பாடல்கள் மனித மனத்தையே அசைத்துவிடக் கூடிய தனித் தன்மை வாய்ந்தன. ஆத்மார்த்தமான கவித்துவம் அந்த பஜனைப் பாடல்களில் வெளிப்பட்டிருக்கும். தற்கால நடை முறைக்கு ஏற்ப மனதை உருக வைக்கும் தன்மை யுடையன. காலா காலத்திற்கும் நிலைத்து நின்று ஒலிக்கக் கூடிய சக்தி வாய்ந்த சிரஞ்சீவிப் படைப் புகள் சுவாமிஜியின் பஜனைப் பாடல்கள். கருத் தாழம் மிக்க அவை புனைந்து எழுதப்பட்டவை யல்ல. ஒவ்வொரு மனிதனுடைய மனத் துன்பங் களுக்கு அமைய அந்தந்த இடங்களில் உள்ளக் கசிவையும், உணர்வையும் தட்டி எழுப்பக் கூடிய அற்புத சக்தி வாய்ந்தவை அவை. சாஸ்திரீக ஞானம் கொண்ட ஆச்சிரம பக்தர்கள் நம் குரு வின் நேரடிப் பார்வையில் பயிற்சி பெற்று பாடு கின்ற பேற்றை பெற்றிருக்கிறார்கள். எல்லாம் வல்ல பரமேஸ்வரனுக்கே பிரியமான சங்கீதமும் வேதங்கள் வழிவந்த வைத்தியமும் எம் குரு வுடன் எப்பொழுதும் தொடர்பு கொண்டிருக் கும் இரண்டு கலைகளாகும். இவ் இரண்டிலும் உள்ள பாண்டித்தியம் பாடல்களிலும் வைத்தி யப் பணியிலும் மிளிர்ந்துகொண்டிருப்பதை காண லாம். வைத்தியம், சங்கீதம், சாஸ்திரம் இம் மூன்று கலைகளிலும் உள்ள நாட்டம் இப்பொழு தும் குறையவில்லை என்பதை தாமாகவே கூறி மகிழ்வார். பஜனைப் பாடல்களுக்கு இசை யமைக்கும் பொழுது பாடல்களுக்குப் பொருத்த மான இராகங்களில் இசையமைத்து பாடிக் காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிப்பார். இது சுவாமிஜி அவர்கள் இசைத் துறையிலும் பாண்டித்தியம் பெற்றிருக்கும் தன்மையைத்தான் உறுதிப்படுத்துகிறது. குறிப்பிட்ட சங்கீத வித்துவான்களுடைய இசையையும் வாத்தியக் கருவிகளில் விசேஷ திறமை பெற்றவர்களின் வாத்திய இசையையும் சில சமயங்களில் திரும்பத் திரும்பக் கேட்டு மெய் மறந்து ரசிப்பார். எம் குருவின் செம்மலர்ப் பாதங்களைப் பற்றி நிற்கும் தம் பக்தர்களின் கர்ம நோய்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு சிகிச்சையளிக்கும் உன்னத பணியையும் சுவாமிஜி செய்வதுண்டு. அவர்கள் தமது கடும் பிணியினால் சுகமடைந்து வினை நீங்கி நடமாடுவது அற்புத கரமாகவே காணப்படும். ஆயுர்வேத வைத்திய முறைகளுக்குரிய மருந்து வகைகளின் வசதிக் குறைவுகள் இலங்கையில் ஏற்பட்ட போதினும் இந்தியாவில் இருந்து பெறுமதி வாய்ந்த மருந்து வகைகளை தம் பக்தர்கள் மூலம் தருவித்து தொண்டாற்றும் பணியை அதன் தொடர்புடைய பக்தர்கள் உயிருள்ளவரை மறக்கவே முடியாது செய்து விடும். ஆயுர்வேத துறையில் விசேஷ பட்டம் பெற்றவர் நம் குரு. இதுமட்டுமன்றி உடலுக்கும், உள்ளத்துக்கும் பலமளிக்கும் யோகக் கலையான யோகாசனத்தை அவரவர்களுக்கேற்ப எளிய முறையில் பயிற்றுவிப்பார் சுவாமிஜி. ஒவ்வொருவருடைய மன வளர்ச்சிக்கும் உடல் உறுதிக்கும் இதன் மகத்தான பங்கை எங்ஙனம் உயர்த்து கிறது என காலப் போக்கில் பலர் உணர்ந்து இக்கலையை மேலும் கடைப்பிடித்து வருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். அதுமட்டுமன்றி வேற்று மதத்தவர்களும் இக் கலையின் சிறப்பை அறிந்து ஆச்சிரமத்தை நாடி வருவதுண்டு. குறிப்பாக வேற்று மதத்தில் துறவுக்கு ஆயத்தமாகும் துறவிகள் கூட இந்த மகத்தான தேவைக்கு நம் குருவின் உதவியை கோரி நிற்பர். கடுமையான நோய் வாய்ப்பட்ட சிலர்கூட சுவாமிஜியினால் பயிற்றப்பட்ட யோகாசனத்தினால் தமது நோய் குணமடைந்து சுகதேகிகளாக வாழ்கின்றனர். இலங்கையர் மட்டுமன்றி பல வெளிநாட்டு மக்களும் இக்கலையில் ஆர்வம் கொண்டு சுவாமியை அணுகி அவர்களிடத்தில் பயின்று சென்றுள்ளனர். சிலர் தியானம் மற்று வேறு பயிற்சிகளில் நாட்டம் கொண்டு சுவாமிஜியை நாடி வருவதுண்டு அவர்களுடைய கேள்விக்கான பதிலை எந்தவித சங்கடங்களுமின்றி வெளிப்படையாகவே கூறிவிடுவார் அவர்களுடைய மனப்பக்குவத்தை அறிந்து அதற்கான வழி துறைகளை விளக்கியும், பக்குவமில்லாதவிடத்து அத்தகைய நிலையை அந்நேரம் அடைய முடியாத விளக்கங்களை இதமாகக் கூறியும் அனுப்பி வைப்பார். ஏமாற்று வித்தைகள் இல்லாத நம் மகானின் தூய்மையான உள்ளத்தைக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்து செல்வார்கள்.

பொதுவாக ஒரு சமய ஸ்தாபனம் மற்றுள்ளவர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமே தவிர தாம் கொடுப்பதில்லை. இங்கு இதற்கு மாறாக பிரசங்கங்கள், வகுப்புகள், சேகரிப்புகள் எதுவுமின்றி மற்றுள்ளோருக்கும் வேண்டுவதை வழங்கி உயர்ந்து நிற்பது ஆச்சரியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொரு செயல். எம் அருட் தெய்வத்தின் அந்தரங்க சக்தியும் பரம சக்தியுமே இத்தகைய ரீதியில் வளர்த்துச் செல்கிறது. இங்கு நடந்து கொண்டிருக்கின்ற கருமங்களும், அள்ளி வழங்கும் தானங்களும், காளான் போன்று திடீர் திடீரென்று எழுந்து நிற்கும் பிரமிக்க வைக்கும் கட்டிடத் தோற்றங்களும். தன் உதிரத்தைப் பிழிந்து எடுததில் வலக்கையால் கொடுப்பது இடக் கைக்குத் தெரியாமல் பக்தர்கள் புரிகின்ற பெரும் கைங்கரியங்களில உருவாகிடவை. பெருமளவு லாபமடையும் பக்தன் தினையளவு கொடுப்பதில் பெரும் பேறடைவதுதான் அதன் அந்தரங்க ரகசியம். அவர்களுடைய தீராத கருமங்கள் தீர்வதுமட்டுமல்ல. மேலும் மேலும் கூடுதலான நன்மைகளையும் உயர்ச்சிகளையும் தான் அவர்கள் அடைந்துகொண்டிருப்பதை அவர்கள் உணராமலில்லை.

நம் குரு ஒரு கருமத்தை எண்ணித் தொடங்கிவிட்டால் ஒற்றைக்காலில் நிற்பது போன்று கருமத்தை முடித்து விடுவார். ஊன், உறக்கம் எதிலும் அக்கறை செலுத்துவதில்லை. ஒரு மன்னன் பிடிவாதம் பிடிப்பதை விட, ஒரு பெண் பிடிவாதம் பிடிப்பதை விட, ஒரு துறவியின் பிடிவாதம் மேலானது என்பது எம் குருவின் கருத்து. ஒரு கருமத்தை எடுத்துக்கொண்டால் அது நல்ல காரியமாக இருநதாலும் சரி கெட்ட காரியமாக இருந்தாலும் சரி எடுத்த காரியத்தைச் சரிவரச் செய்ய வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். இத்தகைய ஒரு பயிற்சி பிழையான வழிக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல முடியாத ஒரு செயற் திறமையை நாளா வட்டத்தில் கொண்டுவந்து விடும். சுவாமிஜி அவர்கள் தொடங்கிய கருமத்தில் சரியோ, பிழையோ, லாபமோ, நஷ்டமோ எதனையும் பாராமல் திட சித்தத்துடன் அழுத்தம் திருத்த மாக செய்து முடித்து விடுவார். சில சமயங் களில் இந்த அற்புதத் துறவி ஒரு பாதத்தை மடித்து ஒரு பாதம் ஊன்றி வைத்திருப்பதன் அர்த்தம் இதுதான போலும். ஒவ்வொரு பக் தனும் அவரிடத்தில் இருந்து கற்றுக்கொள்வதற்கு எத்தனையோ விஷயங்கள் எந்நேரமும் செயல் படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதை அனுபவத்தில் நேரடியாகக் காணலாம். ஒரு கருமத்தை நினைத் துக்கொண்டு அது நல்லதாக இருக்குமோ. கெட்ட தாக இருக்குமோ, சரியாக இருக்குமோ, பிழை யாக இருக்குமோ அதனுடைய பலாபலன் எப்படி யிருக்கும் என்றுள்ளதைப்பற்றியெல்லாம் சஞ்சலப் பட்டு சிந்திக்காத ஒரு நிலையைத்தான் ப்ரக்ரியா என்று சொல்லப்படுகிறது என அழகாக விளக்க மளிப்பார் நம் குரு.

கோபம் என்ற பாவனை உண்டாகின்ற சம யத்தில் பன்றி, எருமை, மரவள்ளி என்றுள்ள கருத்தாழமான சொற்கள் பாணங்களாக வெளி வரும். உருத்ர தாண்டவ பாவனையின் உச்சியில் வேறு காரணங்களினால் கண்டித்த பின் அவரை அழைத்து சமாதானம் கூறி. சிரித்தும் பேசி பணிந்து நிற்கும் கோழைச் செயல் நம் குருவிடத் தில் இல்லை. இரண்டொரு தினங்கள் அப்படியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிடுவார். மறுநாள் கண்டித்த சுவடே தெரியாமல் வழமைபோல் அழைத்துப் பேசி அவரவர்க்குரிய பணிக்குக் கட்டளையிடுவார். செயலில் கவனம் தவறிய தன் பக்தனுக்கு இத்தகைய ரீதியிலும் அவர்கள் கர்ம வினையைத் தீர்த்துவிடுவார். இந்த உண்மையை உணர்ந்த பக்தன் அதனை புஸ்பாஞ்சலியாகவே ஏற்று கண்ணீர் சிந்துவதுண்டு. கர்ம வினை நீங்கி தாம் புனிதப்படுவதாக விளங்கி களிப்புறுவதுண்டு. மற்றவர்களுடன் கருமத் தொடர்பு வைத்துக்கொள்ளும் பொழுது அந்தக் கருமத்தினால் அவர்களுடைய உணர்வுகள் வித்தியாசப்படாமல் இருக்க வேண்டும் என்பதை எப்பொழுதும் கவனத்தில் எடுத்துக் கருமமாற்றுவார்.

மனிதர்களில் ஒவ்வொருவரின் மனோபாவத்திற்கேற்ப அவர்களின் வழிபாட்டு முறைகள் வேறுபட்டிருப்பது இயற்கையானது. ஒரு மனிதன் தான் வழிபடும் தெய்வத்தை எந்த ரீதியிலும் அணுகும் சுதந்திரத்தை கட்டுப்பாடின்றிப் பெற்றிருக்கின்றான். இது இந்து மதத்தின் உயர்ந்த சித்தாந்தம். அந்த வகையில் எம் குருவின் பக்தர்களின் நம்பிக்கைகளும் வேண்டுதல்களும் மாறுபட்டிருப்பது அதிசயமானதல்ல. நாம் வணங்கும் தெய்வத்தை பிரத்யக்ஷமாக கண்ணால் காண்பது இயலாத காரியம். அந்த ஆற்றலும் நமக்கு இல்லை. ஆனால் நம் குருவையே தம் இஷ்ட தெய்வமாக வழிபடும் பக்தர்களுக்கு அந்தக் கவலை சிறிதும் இருப்பதில்லை. இந்த ஞானியை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை தரிசித்தவர்கள் அவர் நினைவாகவே இருந்து விடுகிறார்கள். ஆத்மீக நாட்டம் சிறிதுமில்லாத பக்தர்கள் கூட அத்தகைய அறிவு தமக்கு இல்லை. இல்லாவிடினும் நம் குரு தேவரை வணங்குவதிலும், சிந்திப்பதிலும், அவர் புகழைப் பேசுவதிலும் அந்த உணர்வில் திளைத்து அந்த மகானைப் பூஜிப்பதிலும் தம் வாழ்க்கையில் மிகுந்த நம்பிக்கையுடையவர்களாக இருப்பதாகக் கூறுவதுண்டு. அநேகமான பக்தர்கள் நம் குருவின் நிழலுருவப் படத்தை சுவாமி அறையில் புனிதமாக வைத்துப் பூஜிக்கிறார்கள். தம் மனச் சுமையை அதன் முன் நின்று தீர்த்து ஆறுதல் அடைகின்றார்கள். வேறு சிலர் தமக்கு ஏற்படும் ஒவ்வொரு கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் சுவாமிஜியின் நிழலுருவத்தின் முன் உண்டியல் வைத்து நேர்ந்து பணத்தை இட்டு, அத்தனை கஷ்டங்களும் தீர்ந்துவிட்டதாக அவற்றை குருவிடத்தில் அர்ப்பணிப்பார்கள். சில பக்தர்கள் பக்தியின் உயர்வைக் காட்டும் முகமாக சுவாமிஜிக்கு தீப ஆராதனை செய்து அவர் முன் மனமுருகி தேவார திருவாசகங்களை இசைத்து வழிபடுவது கண்கள் நிறைந்த ஒரு காட்சி என்றே கூறலாம். அத்தகைய ஓர் கைங்கரியத்தைக் காணும் பொழுது அந்தக் காட்சி உடலையே ஒருமுறை சிலிர்க்க வைத்துவிடும். விஷேச காலங்களில் சில பக்தர்கள் சுவாமிஜியின் செம்மலர்ப் பாதங்களை நீரால், பாலால், இளநீரால் வார்த்துப் புஷ்பங்கள் வைத்துத் தீப ஆராதனை செய்து, அந்தப் புனித தீர்த்தத்தை பிரசாதமாகப் பருகி, பாத பூஜை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் காட்சி உலக எண்ணத்தை மறந்து அந்தப் பாதார விந்தங்களை தஞ்சமெனக் கொள்ளும் வண்ணம் மேனியை உருக்கிவிடும். கண்கள் கண்ணீரைச் சொரிந்துவிடும்.

முதன் முறையாக சுவாமிஜியின் தரிசனத்தைப் பெறுவதற்காக அம்மகானின் இருப்பிடமாகிய யோகாச்சிரமத்தை நாடி வருவார்கள். சில சமயங்களில் தரிசனம் கிடைப்பதில்லை. திரும்பவும் செல்வார்கள். கிடைப்பதில்லை. பல முறை முயன்ற பின்புதான் சிலருக்கு சுவாமிஜியின் தரிசனப் பேறு கிடைக்கிறது. அவர்களுடைய விடா முயற்சிக்கும், அந்தத் தெய்வத்தை தரிசிக்க வேண்டிய தாகத்திற்கும், பொறுமைக்கும் சோதனைக்குள்ளாகி விடுகின்றனர். சில பக்தர்கள் வருகின்ற சமயம், வயல் காரியங்கள், ஆலய காரியங்கள், வெளியூர் என்று சென்று விடுவதனால் தரிசனம் கிடைப்பதில்லை. சில சமயங்களில் ஆச்சிரமத்தில் இருந்தாலும் கூட அகால சமயங்களில் வருகின்ற பொழுது தரிசனம் அளிக்க மறுத்து விடுவார். அவர்களும் தரிசனமளிக்கும் நேரம் அதுவல்ல என்றுணர்ந்து வீடு திரும்புவர். சிலர் கடவுளையே கண்டு பேசிவிடலாம், சுவாமிஜியைக் கண்டு பேச முடியவில்லையே என்று அங்கலாய்ப்பார்கள். சும்மா இருக்கின்ற கடவுளைப் பார்த்து பேசுவது சுலபம். அவரோடு சென்று பேசச் சொல்லுங்கள். இவன் எந்நேரமும் ஒரு கருமத்தில் செயற்பட்டுத் தான் இருக்கிறான். நேரமுள்ள நேரம், அதற்குறிய நேரங்களில்தான் பேச முடியும் என்று ஹாஸ்யத்துடன் இரு பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படக் கூறுவார். மறு நிமிடம் கருமம் முடிந்ததும் அவர்களை அழைத்து தாமாகவே தரிசனமளிப்பார், நம் அற்புதக் குரு. தமக்கு எண்ணிக்கை அளவில் ஏராளமான சிஷ்யர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஏராளமான சிஷ்யர்கள் இருக்கவேண்டும் என்ற அபிலாஷை அவரிடத்தில் இல்லை. சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று பிரயத்தனப்படுத்துவதுமில்லை. அப்படியுள்ள ஒரு நோக்கத்துடன் நேரத்தைச் செலவிடுவதும் இல்லை. ஏராளமான சிஷ்யர்கள் இருப்பதை விட குறைந்த அளவு சிஷ்யர்களே தமது எண்ணங்களை விசாலப்படுத்தி நல்ல சுபாவங்களை வளர்த்து ஆத்ம சக்திகளைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாயிருப்பார். சில சமயங்களில் சுவாமிஜியைத் தரிசிக்கச் செல்லும் நேரத்தில் அம்மகான் சயனித்திருப்பதாக பக்தர்கள் திரும்பி வருவதுண்டு ஒரு பாதத்தை உயர்த்தி நிறுத்தி மறு பாதத்தை அதன் மேல் வைத்து துயில் கொள்ளும் யோக நித்திரையின் ஆழத்தை நாம் எங்கு கண்டு கொள்ள முடியும்? அத்தகைய யோக நித்திரையில் சஞ்சாரம் பண்ணி வரும் அற்புத நேரத்தில் பக்தர்கள் தொந்தரவு கொடுப்பதில்லை. விழிக்கின்ற நேரம் வரை காத்திருந்து தரிசனம் பெற்றுச் செல்வர். பகலில் துயில் கொள்ளும் வழக்கம் சுவாமிஜியிடத்தில் இல்லை, இரவிலும் மிக குறைந்த அளவிலான தூக்கத்தையே மேற்கொள்வார். தம் திருக்கரத்தின் ஒன்றினை சிரசின் கீழ் வைத்து கால் பாதங்களை நன்றாக நீட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருக்களித்துச் சயனிக்கும் காட்சி அற்புதமாக இருக்கும்.

சுவாமிஜியின் ஆத்ம சக்தியினால் உருவாக்கப்பட்ட நடேசர் ஆலயத்தில் விசேஷ காலங்களில் பூஜைகள் பெரு விழாவாக எடுக்கப்பட்டு நடைபெறுவதுண்டு. ஜனங்கள் பெருமளவில் வழிபாடுகளில் பங்குகொள்ள வருவார்கள். ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமானுடைய தரிசனத்தை மட்டுமன்றி இந்த ஞானியின் தரிசனத்தையும் யாவரும் தரிசித்து மனநிறைவுடன் செல்லும் காட்சி மெய் சிலிர்க்க வைத்துவிடும். ஒரே நேரத்தில் இரண்டு தரிசனங்களைப் பெறும் புண்ணிய கைங்கரியத்தை வேறு எங்குதான் இந்தப் பக்தகோடிகள் பெற முடியும். அத்தனையும் புண்ணியம் பெற்ற ஆத்மாக்கள். ஆலயத்தில் வருமானமாகப் பெறும் பணத்தை குருக்கள் முதலாக அங்கு தொண்டுகள் புரிந்த அத்தனை பேருக்கும் தனித் தனியாகப் பகிர்ந்து அளித்துவிட்டு மன நிறைவுடன் ஆச்சிரமம் திரும்புகின்ற உத்தம துறவி நம் குருஜி. இறைவனுக்குள்ள தேவைகளுக்கு அந்தந்த சமயங்களில் வந்துகொண்டிருக்கும். நாளைக்குத் தேவை என மிச்சப் படுத்தினால் சாதாரண மனிதனுக்கும் இறைவனுக்கும் என்ன வேறுபாடு என்பதில் திடமான வைராக்கியமுடையவர்.

அநேகமான பக்தர்கள் சுவாமிஜியின் தரிசனத்தைப் பெற்று தமது வாழ்க்கைப் பிரச்சனைகளை நம் குருவிடத்தில் கூறி பரிகாரத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தியையும் வேண்டி நிற்கின்ற பொழுது, அம் மகானின் அகன்ற இரு விழிகளும் மிகக் குறுகிய நேரத்தில் அசுர வேகத்தில் அங்கும் இங்கும் உருண்டோடுவதைப் பிரத்தியேகமாகக் கூறுவ துண்டு. சில பக்தர்கள் அந்த ஞானியின் நயனங் களை எதிர் கொள்ளச் சக்தி இல்லாமல் இருப்ப தாக கண்ணீர் மல்கிக் கூறுவதையும் நிதர்சன மாகக் கண்டிருக்கின்றோம். அத்தகைய அகன்ற விழிகளுக்கு மிகக் குறுகலான சிறிய புருவம் கீழ் நோக்கிய வண்ணம் இருப்பது கருணை தேங்கி நிற்கும் முக விலாசத்தைக் கொடுத்து மேலும் மெருகூட்டுகிறது. இந்தப் பிரபஞ்சத்தில் சிருஷ் டிக்கப்பட்ட உயிரினங்கள் அதாவது பறவைகள் மிருகங்கள், ஊர்வன, சிறப்பாக மனிதர்கள் எல் லோரிடத்திலும் ஏதாவது ஒரு பாகம் சக்தி பெற் றிருக்கும். ஒரு மனிதனுக்கு எல்லாவிதமான ஆற் றல்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்து வது கண் ஒன்றுதான். ஞானிகளுக்கு அது பிர காசிக்கும் எம் குரு தேவருக்கு அவர்களுடைய ஞான விளக்கம் போன்ற பெரிய விழிகளிலே தான் எல்லா அபூர்வ சக்திகளும் அடங்கியிருக் கிறது. அது ஒரு அற்புதகரமானது.

சுவாமிஜி அவர்கள் முதன் முறையாக சந் திக்கும் பக்தர்களிடத்தில் அவர்களது பெயரை ஒருமுறை கேட்டு வைத்துக் கொண்டாரானால் எவ்வளவு காலத்திற்குப் பின்பு சந்திக்கின்ற பொழு தும் அந்தப் பெயரால் அன்புடன் அழைத்து ஆச்சரியத்தில் மூழ்கடித்து விடுவார். சாதாரண மாகவே தன் பக்தர்களைப் பெயர் சொல்லி குழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக அழைக்கும் பாங்கு மனதைக் கரைய வைத்துவிடும். அன்பு ததும்பப் பெயர் கூறி அழைத்துக் கொள்வார். மிகவும் குதூகலமாக இருக்கின்ற வேளைகளில் அழகான வெண்முத்துப் பற்கள் சிதறப் பெயருடன் பிரத்தியேகமான சொல்லையும் சேர்த்து உற்சாகத்துடன் ஹாஸ்ய மாக அழைப்பார். ஒரு முறை சந்தித்த குழந்தை கள் அவரின் கருணையான சொற் தெறிப்பினாலும் அன்பான விசாரணைகளினாலும், அதன் கசிவி னாலும் குழந்தைகளோடு குழந்தையாக ஐக்கியப் பட்டு நிற்கும் அன்பினாலும் கவரப்பட்டு ஆட் கொள்ளப்பட்டு விடுகின்றனர். யாருடைய நிர்ப் பந்தமுமின்றி அம் மகானின் தரிசனத்தை திரும் பவும் பெறத் தாமாகவே தம் பெற்றோரை வற் புறுத்தி வேண்டுவதுண்டு. ஒவ்வொருவருடைய பெயருக்கும் வாழ்க்கைச் சம்பவங்களுக்கும் சம்பந் தம் இருக்கின்றதோ இல்லையோ எமது பகுத் தறிவுக்குட்பட்டவரை பல விசயங்கள் ஆதார பூர்வமாக நிரூபிக்க முடிவதில்லை. இருந்தும் நமது உச்சரிப்பில் எழும் ஒலி அலைகளில் சக்தி யும் அர்த்தங்களும் பல பிரதிபலிப்புகளை உண்டு பண்ணாமல் விடப்போவதில்லை. இத்தகைய ரீதியில் சுவாமிஜியினால் நாமகரணம் சூட்டப் பட்ட ஆச்சிரமக் குழந்தைகள் அநேகம். அவர் கள் இந்த வகையில் பெரும் புண்ணியப் பேறு பெற்ற ஜன்மங்கள். சுவாமிஜியினால் சூட்டப் பட்ட அழகான பொருள் நிறைந்த நாமங்களை ஒவ்வொன்றாகச் சேர்த்து கோர்த்தெடுத்தாலே அவை நாமாவளி என்ற பெரும் மாலையாக நீண்டு நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊண் உண்பதைக் கண்டிக்காத நிர்ப்பந்திக் காத இடம் நம் குருவின் ஆச்சிரமம். யாரிடத் திலும் தம் அபிப்பிராயத்தைத் திணிப்பதில்லை. எல்லோரும் ஏற்றத் தாழ்வின்றி சுவாமிஜியை வந்து தரிசிப்பார்கள். கருமங்களில் பங்கெடுப் பார்கள். பாகுபாடு இங்கில்லை. தொழில் ரீதி யில் பிறப்பிலிருந்தே செய்ய வேண்டிய சுய கர் மம் ஒன்று உண்டென்பதால் அவர்களை அவரவர் துறையிலேயே ஊக்கப்படுத்துவார். புலால் உண் பதைக் கண்டிக்காத எம் குரு அதற்காக அர்த்த மற்ற கருத்துக்கள் சொல்வதை கடுமையாகத் கண்டிப்பார். சுற்றாடல், விருந்து வைபவங்கள், நண்பர்கள் இவற்றுக்கான காரணங்களைக் கூறும் பொழுது கடுமையாக மாறிவிடுவார். எமது பண்பாடு, கலாச்சாரம் இவற்றிற்குப் பொருந் தாத, இந்து மதத்திற்கே இழுக்கான ஒரு நோக்கு என்பதை வன்மையாக சுட்டிக் காட்டத் தவறு வதில்லை. விருந்து என்றாலும், ஆலயம் என் றாலும், உபசரிப்புகள் என்றாலும் என்ன நிலை யிலும் உணவிலும் உடையிலும் மாறாத பண்பு இருக்க வேண்டுமென்பதில் கண்டிப்புள்ளவர் எம் குரு. விருந்தோம்பல் என்ற உன்னத செயலிலும் பிரத்தியேக உபசரிப்புகளை விரும்பமாட்டார். ஒருவனுடைய கடவுள் பக்தி, இறை வணக்கத் தில் பெரிதான காரியம் எதுவுமில்லை. கள்வ னும் களவெடுக்கப் போகும்பொழுது கடவுளை வணங்கித்தான் களவெடுக்கச் செல்கிறான். அதனை எவரும் செய்து கொள்ளலாம். ஆனால் எமது வாழ்க்கையில் பண்புகளை மறக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதய சுத்தியுடன் தர்மத்தின் அடிப்படையில் வாழ வேண்டியது அவசியம் என்பதை உடைத் தெறிந்து பக்தர்களுக்குக் கூறுவார் நம் குரு.

தன்னைச் சரணடைந்த பக்தனுக்கு சுவாமிஜி எந்த விதத்திலும் கட்டுப்பாடு விதிப்பதில்லை. நல்லவற்றைக் கேட்பதற்கும் பலனடைவதற் கும் தடை செய்வதில்லை. நல்லவை எந்தத் திசையிலிருந்து வந்தாலும் அதில் கலந்து மன சுகம் அடைவதை ஊக்கமளிக்கும் மண விசாலம் கொண்டவர் இந்த ஞானியாகத்தான் இருக்க முடியும்

தன் பக்தர்களை அழைக்கின்றபொழுது சமு தாயம் அவர்களை என்ன விதமாக அவர்களின் தொழிலைக் கொண்டு அழைக்கின்றதோ அந்த வகையிலேயே சுவாமிஜியும் அழைத்துக் கொள் வார். ஆசிரியராக இருந்தால் மாஸ்டர் அல்லது ரீச்சர் என்றும், வைத்தியனாக இருந்தால் **Doctor** என்றும் அழைத்துக்கொள்வார். சில அரசாங்க அதிகாரிகளின் குறுகலான சொற்களை அப்படியே கூறி அழைப்பார். மற்றவர்களை அழைத்துவர சிறு பிள்ளைகளிடம் கட்டளையிடும் பொழுது அந்த அண்ணனை அழைத்து வா, ஐயாவை அழைத்து வா. என்றுதான் கூறுவார். தோட்டி யாகத் தொழில் புரியும் தொழிலாளியை முதற் கொண்டு அந்த அண்ணனை வரச் சொல்லு என்றுதான் கூறுவார் நம் பண்பான குரு.

சுவாமிஜியிடத்தில் வயல் மற்றும் பல துறை களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானவர்களாகவும், திறமைசாலிகளாகவும் அதே சமயம் முரடர்களாகவும் இருப்பார்கள். அவர்களை அன்புடனும் கண்டிப்புடனும் நடந்து வேலைகளைப் பெற்றுக் கொள்வார். பெருந் தொகையான மக்கள் வந்து தரிசித்து வழிபட்டுச் செல்கின்ற ஒரு துறவி வயலில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சமைத்துக் கொடுக்கும் காட்சியை எந்த இடத்திலாவது யாரேனும் பார்த்திருக்க முடியுமா? அவர்கள் உண்ணும் பாத்திரங்களைக் கூட தம் திருக்கரங்களால் கழுவி உணவு பரிமாறி அவர்களுக்கு அனுப்பி வைக்கும் எம் அன்புத் தெய்வத்தின் மன விசாலத்தை நினைக்கும் பொழுது உடல் சிலிர்க்கும். தொழிலாளர்கள் உடல் வருந்தி உழைத்துக் களைத்த சமயம் அவ்வப்பொழுது உடல்களை அறிந்து தேநீர் தயாரித்து மன நிறைவுடன் கொடுக்கும் ஓர் விசித்திர ஞானியின் பெருங் கருணையை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது. தொழிலாளர்களோடு தொழிலாளி போன்று உணவுமின்றி கொட்டும் பனியில் கண் விழித்து வயல் காவல் காக்கும் பக்குவத்தை நினைத்தால் பக்தர்கள் மனம் வேதனை அடையும். அதில் தாம் பெரும் சுகமடைவதாக எம் குருஜி உள்ளம் பூரித்து மகிழ்வுடன் கூறுவார். வயல் அறுவடை முடிந்து தொழிலாளர்களின் உழைப்பில் பெறும் பலனில் கூடுதலான லாபத்தைப் பணமாகவும் நெல்லாகவும் அவ்விடத்திலேயே அவர்களுக்கு அளித்து மன நிறைவுடன் ஆச்சிரமம் திரும்புவார், எம் அன்புக் குரு. தொழிலாளிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பில் பெறும் லாபத்தில் சமபங்கு தொழி லாளர்களுக்கே உரியது என்பது சுவாமிஜியின் உயர்ந்த சித்தாந்தம்.

சுவாமிஜி அவர்களினால் பல வருட காலம் கடும் பிரயாசையால் காடுகள் திருத்தி நெல் விளையும் பூமியாக மாறிய வயல் நிலத்தின் சுற் றாடலில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் சுவாமிஜியை நம்பி வாழ்கின்றனர். அவர்களில் சிலர் வேறு தொழிலுக்குச் செல்லாது சுவாமிஜி யின் வயல் கருமங்களை மட்டும் மிகவும் சிரத் தையுடன் கவனித்து வருவார்கள். அறுவடை முடிந்ததும் அவர்களின் வீட்டுத் திருத்தங்களுக் கான பணத்தை கண்டிப்புடன் கொடுத்து திருத்து விப்பார். சுவாமிஜியை நம்பி வாழும் தொழி லாளர்களுக்கும் சுவாமிஜி இட்ட பணிகளைப் புரியும் ஆச்சிரம தொண்டர்களுக்கும் உணவு, உடை மற்றும் அவர்களுடைய வாழ்க்கைத் தேவை களை தன் நேரடிக் கண்காணிப்பிலேயே நின்று பூர்த்தி செய்வார். சுவாமிஜியின் ஆத்ம சக்தி யினால் உருவாக்கப்பட்ட ஆலயத்தின் நித்திய பூஜை வழிபாடுகளைக் கவனிக்கும் ஆலய குருக் களுக்கு முதற்கொண்டு காய் பிஞ்சு, தானிய வகை வரை சகல பொருட்களையும் தம் திருக் கரங்களினாலேயே ஒவ்வொன்றாக எடுத்து, கூடைக்குள் புனிதமாக அடுக்கி வைத்து நேரடி யாக அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று கொடுப்பதற்கெனச் செல்லும் காட்சி மனதை அப்படியே நெகிழச் செய்துவிடும். புது வருடப் பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள், ஆச்சிரம தொண்டர்கள், ஆச்சிரம குழந்தைகள், ஆலய குருக்கள் இவர்களை ஒவ்வொருவராக தவறாது மனதிற்கொண்டு புதிய ஆடைகள் தருவித்து அன்போடு கொடுத்து அவர்களை சந்தோஷப்படுவார், இந்த மகான். தன்னைச் சுற்றியுள்ளவர்கள், தன்னை நம்பியிருப்பவர்கள் தன்னையே கதியாகப் பற்றியிருப்பவர்கள் வயிறார உண்டு உடுத்து ஒரு குறையுமின்றி இருக்க வேண்டுமென்ற சிந்தனையில் சுவாமிஜி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாக இருப்பார்.

சுவாமிஜியின் ஆச்சிரமத்தில் வளரும் குழந்தைகளை எவரேனும் அனாதைகளாக மதிப்பிடுவதையும், அந்தக் கண்ணோட்டத்துடன் நடந்து கொள்வதையும் சுவாமிஜி சிறிதும் விரும்புவதில்லை. ஒரு உத்தமமான தாய் தன் குழந்தைகள் அடுத்தவரிடத்தில் சென்று பசிபோக்க விரும்ப மாட்டாள். அது போன்றுதான் நம் குரு அவர்களைப்பற்றிப் பேசுகின்ற பொழுது மனம் கசிந்து கூறுவார். சுதந்திரத்திலும், உணவு விஷயத்திலும் ஒரு சாதாரண குடும்பத்தினரை விட கூடுதலான சலுகைகள், போஷாக்கு நிறைந்த சத்துணவுடன் தாம் விரும்பியதை வயிறார உண்டு வாழ்கின்ற ஒரே இடம் இந்த ஆச்சிரமம் என்பதை துணிந்தே கூறலாம். வயல் அறுவடை முடிந்து அதிலிருந்து பெறப்படும் நெல்லின் ஒரு பகுதியை ஆச்சிரம குழந்தைகளுக்கென எடுத்து வைப்பார். அடுத்த போக விளைவுக்கு விதை நெல்லை துப்பரவாக எடுப்பது போலவே சங்கத்திற்கும் புடைத்து துப்பரவாக்கி கட்டுவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புவார். எந்தக் கருமமென்றாலும் அழுத்தம் திருத்தமாகவும் இருதய சுத்தியுடனும் செய்து முடிப்பார் எம் குருஜி.

ஒரு துறவிக்கும் தெரிந்திருக்க வேண்டிய லக்ஷணங்களில் சமையல் பகுதியும் ஒன்று என்பதை சுவாமிஜி வற்புறுத்திக் கூறுவதுண்டு. சுவாமிகளுடைய திருக்கரம் பட்டு சமைக்கப்பட்ட உணவை உண்ணும் பேறு பல பக்தர்களுக்கு கிடைக்கப்பெற்றிருக்கிறது. சாதமும் வகை வகையான கறி வகைகளும் அந்தத் திருக்கரம் பட்டதனால் மிகவும் ருசியாகவும் தரம் உயர்ததாகவும் இருப்பதாக ஆச்சரியப்படுவார்கள். அவை சத்துள்ளதாகவும், போஷாக்கு நிறைந்ததாகவும் இருக்கும். சமைக்கப்படும் உணவு சத்துள்ளதாகவும், அதே நேரத்தில் பொருளாதாரத்திற்கேற்ப காய் கறிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதிலும் பக்தர்களுக்கு வழிகாட்டியாக இருப்பார். எல்லா வகையான உணவுகளையும் தாம் உண்ணாவிட்டாலும் தன்னை நம்பி இருக்கும் ஆச்சிரம தொண்டர்களுக்கும் குழந்தைகளுக்கும் வகை வகையாக செய்து தன் கரங்களினால் கொடுப்பார். சமையல் வேலையிலும் ஈடுபடும் பொழுது சமைத்து முடித்து தனக்கு உதவி புரிந்தவர்களுக்கு தம் கைகளினால் பரிமாறி ஆச்சிரம தொண்டர்களுக்கும் கொடுத்து அந்தக் கருமத்தை சம்பூர்ணப் படுத்துவார். அங்கும் அரையும் குறையுமான செயல் இருப்பதில்லை. பாத்திரங்கள் கூட சுவாமிஜியின் கரங்களால் கழுவி துடைத்து அடுக்கப்பட்டிருக்கும். சமையல் அறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைத்ததற்கான அறிகுறிகள் எதுவும் தென்படா மல் புனிதமாகக் காணப்படும். மொத்தத்தில் அது ஓர் புனிதமான யாகசாலை என்றே கூற லாம். அதில் நின்று நம் குருவுக்குப் பணிபுரியும் சிஷ்யர்கள் பெரும் பேறு பெற்ற ஆத்மாக்கள். சில சமயங்களில் சுவாமிஜி உணவில் நாட்டமின்றி இருப்பதுண்டு. அத்தகைய நாட்களிலும் அந் தந்த நேரத்தில் அந்தந்த கருமங்களைச் செய்து கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால் உண வைத் தயாரிப்பார். உண்பதில்லை. ஆச்சிரம குழந்தைகளுக்கு அன்புடன் கொடுத்தனுப்புவார். சமைக்கின்ற வேளையில் உணவருந்த ஆயத்த மாகும் வேளையில் பக்தர்கள் நாடிவந்தால் காத் திருக்க வைத்து சமைப்பதோ, உணவருந்துவதோ ஒருபொழுதும் கிடையாது, திரும்பவும் சந்திக் கக் கூடிய நேரத்தைக் கூறி அனுப்பிய பின்பு தான் செயலில் ஈடுபடுவார். சமைக்கின்ற வேளை களில் பேசுவது இல்லை. நிவேதன உணர்வுடன் தயாரிக்கும் உணவு என்பதனால்தான் அதன் ருசி யும் உயர்ந்ததாக இருந்துவிடுகிறது. எம் குருவின் திருக்கரங்கள் எதைச் செய்தாலும் அது ஒரு தனித்துவம்தான். ஒருவருடைய தலையை இந்தத் திருக்கரங்கள் தொட்டுவிட்டாலே என்ன என்ன அற்புதங்கள் நடந்துவிடுகிறது. இதே கைகள் தான் சமைக்கிறது, பாத்திரங்கள் கழுவுகிறது. மண்வெட்டியும் பிடித்திருக்கிறது. இன்னும் எத் தனையோ கருமங்களை செய்கின்றது. சுவாமி ஜியை ஆதாரமாகப் பற்றி நிற்கும் பக்தர்கள் மனத்தால் துதி செய்து நிவேதித்து அளிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவை ஏற்றுக் கொள்வார். உணவில் ருசியை எதிர்பார்ப்பதில்லை. முழு உணர்வும் அதில் சிந்தி தயாரித்து அளிக்கும் உணவை உள்ளக் களி வுடன் ஏற்று உண்ண சுவாமிஜியின் தயாள உள்ளம் மறுப்பதில்லை. சில சமயங்களில் தாம் விரும்பிய இடத்திலிருந்து தருவித்தும் உணவை எடுப்பதுண்டு. சுவாமிஜி உணவு விசயத்தில் தம் மையும் ஆச்சிரமத்தில் உள்ளவர்களையும் மட்டும் கவனிப்பதில் நின்று விடுவதில்லை. ஆச்சிரமத்தில் வளரும் பிராணியான நாய் கூட பெரும் பேறு பெற்றது என்றுதான் கூறவேண்டும். அதற்கும் தம் கைகளினால் தயிர், நெய் கறி வகைகளுடன் சாதத்தைப் பிசைந்து ருசி பார்த்து அனுப்பு கின்ற பெருங்கருணை யாவரையும் வியப்படை யச் செய்து விடும். சுவாமிஜி உணவருந்த வரும் சமயம் அந்தந்த நேரங்களில் சமையல் அறையைச் சுத்தி உள்ள வேலியில் வந்து நிற்கும் காகங்கள் கூட தம் உணவுக்கான பங்கை சுவாமிஜிபிட மிருந்து பெறுவதற்கு காத்து நிற்கும். சுவாமிஜி யும் தவறாது காலையும், மதியமும் அதற்கு உண வளிப்பார். காலத்துக்குக் காலம் ஆச்சிரமத்தை நாடி பல விலங்கினங்கள் வருவதுண்டு. அவை எத்தகைய சந்தர்ப்ப வசத்தினால் ஆச்சிரமத் திற்கு வந்தாலும் ஒரு பொழுதும் ஏற்க மறுப்ப தில்லை எங்கள் சுவாமிஜி. தங்கள் கர்ம வினையை இங்கு போக்குவதற்கு வருகின்ற இந்த விலங் கினங்களை திரும்ப அனுப்புவதில்லை என்று மனம் கசிந்து கூறுவார். மான், மயில், நாய், பூனை, முயல் இப்படியாக ஏதோ ஒன்று ஆச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமத்தில் சுவாமிஜியின் இணக்கத்தில் இருப்ப தற்கு பேறு பெற்றுக் காணப்படும். அந்தந்த மிருகங்களுக்கு எந்த உணவு வகையில் அலாதி பிரியம் என்பதை தெரிந்து வைத்துக்கொண்டு வேளா வேளைக்கு உணவளிப்பார். ஒவ்வொரு விலங்கினத்திற்கும் அதனுடைய வசதிக்கேற்ப இருப்பிடமும் ஒழுங்கு செய்து கொடுப்பார் நம் குரு. சாதாரணமாக வீடுகளில் வளர்க்கப்படும் பூனைகள் எப்பொழுதும் நம் கால்களில் இழுபறி பட்டுக்கொண்டிருக்கும். சமையல் அறை எப் பொழுது திறக்கும் என்று காத்திருந்து திறப்ப வர்களுக்கே தெரியாமல் நுழைந்து விடும். கள வெடுத்துச் சாப்பிடும். உணவு வைக்கின்ற வேளை யிலும் கால்களுக்குள் வந்து மோதிச் சென்று உண்ணும். ஆச்சிரமத்தில் வளர்கின்ற பூனை இந் தக் குணங்களுக்கெல்லாம் எதிர்மாறானது. உணவு உண்ணும் நேரம் சுவாமிஜி அதன் உணவை ருசிக் கேற்ப குழைத்து வைத்து விட்டு ஒருமுறை பார்த்த பின்புதான் சாப்பிடும். சமைக்கும் இடத்திற்கு ஒருபொழுதும் வருவதில்லை. அறைக் கதவுக்கு வெளியே நின்றுகொண்டிருக்கக் கூடியவாறு சுவாமிஜியினால் பழக்கப்பட்டிருக்கிறது. ஆச்சிர மத்தில் வளரும் எல்லா மிருகங்களும் ஒரு ஒழுங்கு முறையான கட்டுப்பாட்டில் உலாவி வரும், பாங்கு அற்புதமாக இருக்கும். ஒரு மெல்லிய தடியினால் மேசையில் தட்டி எழுப்பும் ஒலியில் அவை அங்க மெல்லாம் ஒடுங்கி அந்தந்த இடங்களில் நின்று கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உத்தம குருவினருகே சிறிது நேரம் நின்று அவதானித்தால் எத்தனை எத்தனையோ குணாதிசயங்கள் தோன்றி மறைந்து கொண்டிருப்பதைக் காணலாம். யானையைப்போன்று சாந்தமாக அமைதியாக இருப்பார். சிங்கத்தைப் போன்று சுறு சுறுப்பாக இருப்பார். மயில் போன்று மகிழ்ச்சியுடன் உலாவுவார். எறும்பைப் போல் சுறு சுறுப்பாகவும் கடுமையான உழைப்பாளியாகவும் இருப்பார். வேகம் நிறைந்த இளைஞனைப் போன்று துடிதுடிப்புடனும் காணப்படுவார். புத்தரைப் போன்று கருணையுள்ளவராகவும் காணப்படுவார், சிபிச் சக்கரவர்த்தி போன்று காருண்யம் மிக்கவராகவும் தோற்றமளிப்பார். ஒரு உத்தம யோகிக்குள்ள குணாம்சங்கள் இவை என்பது போன்று ஒவ்வொரு செயலிலும் பரிணமித்து நிற்பார் நம் குரு.

சுவாமிஜி அவர்கள் தமது பாவனைக்கென எடுக்கும் எந்தப் பொருளாயினும் நேர்த்தியாகவும் சரியாகவும் இருக்க வேண்டுமென்பதில் கவனமுள்ளவர். அந்த விஷயத்தில் ஒருபொழுதும் அலட்சியமாக இருந்துவிட மாட்டார். மோட்டார் வாகனமாயிருந்தாலும், உழவு யந்திரமாக இருந்தாலும் மின்சார உபகரணங்களாயிருந்தாலும் சிறு பிழைகள் வேறுபாடுகள் தென்பட்டாலும் திருத்தி அதற்குரிய நிலையில் நேர்த்தியாக வைத்திருப்பார். தன்னுடையது என்று எதையும் கூறுவதில்லை. அங்குள்ள வாகனங்களைப் பற்றிப் பேசுகின்றபொழுது சமாஜ **Tractor**, சமாஜ **Car** என்று கூறுவார். எம் குருவினால் அளிக்கப்படும் புண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணிய கருமங்களை சமாஜத்தினால் கொடுக்கப் பட்டது என்றும் தம் திருக்கரங்களால் சமைக் கப்பட்ட உணவை ஆச்சிரமத்தில் சமைக்கப்பட்ட உணவு என்றும் கூறுவார். தன் பக் தர்களினால் மேற்கொள்ளப்படும் நல்ல காரியங் களை ஆச்சிரமத்தைச் சேர்ந்தவர்களினால் செய் யப்பட்டது என்று மகிழ்வுடன் கூறுவார். நம் அன்புக் குருவின் பழுத்த ஞானத்தின் முதிர்ச்சி யால் எழுதப்படும் அற்புத வசனங்களைக் கொண்ட நூல்களை வெளியிடும்பொழுது சிவயோக சமாஜ சத்சங்கத்தினர் என்ற மேற்கோளில் வெளியிடு வார். இத்தகைய உயர்ந்த செயல் மூலம் கற் றறிவதற்கு நிறைய உள்ளார்த்தங்கள் இருப்பதை ஒவ்வொருவரும் உணரக் கூடியவாறு தான் ஒவ் வொரு கருமமும் காணப்படும். நான் எனது என்ற அகங்கார போர்வையற்ற மாயைக்கும் அப்பாற்பட்ட எம் குரு எங்கே? நாம் எங்கே?

சுவாமிஜியின் இருப்பிடத்திலிருந்து வெகு தூரத்தில், அயல் நாடுகளில் இருப்போர் தமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவார்கள். ஏராளமான கடி தங்கள் நாள்தோறும் வந்தவண்ணமே இருக்கும். சில சமயங்களில் சுவாமிஜி அத் திசைக்கே திரும்பு வதில்லை. பார்வையினாலேயே அவை ஆசீர் வதிக்கப்பட்டு விடுகிறது. இருந்தும் சுவாமிஜிக்கு கடிதம் எழுதியதும் அவர்களினால் பார்க்கப்படு கின்றதா? பதில் கிடைக்குமா என்ற எதிர் பார்ப் பின்றி அவரிடத்திலேயே தம் சுமையை இறக்க விட்டு மன அமைதியுடன் இருப்பதாக பல பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்கள் கூறுவர். அத்துடன் அதிஷ்டவசமாக சுவாமிஜியிடமிருந்து பதில் கிடைக்கின்ற வேளை அவர்கள் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு சாந்த மனோபாவத்துடன் இருப்பதாகவும் கூறுவதுண்டு.

பொதுக் கூட்டங்கள், பொது நிகழ்ச்சிகள், அரங்கேற்றம் இப்படியானவற்றுக்கு தலைமை வகித்து நடத்த வேண்டும் என பல பக்தர்கள் சுவாமிஜியை அன்புடன் வேண்டுவதுண்டு. அத்தகைய லௌகீக சம்பிரதாயங்களை சிறிதளவேனும் விரும்புவதில்லை. இருந்தும் மிகவும் தவிர்க்க முடியாத லௌகீக சம்பிரதாயங்களுக்கு தன் அருளாசிகளை அனுப்புவதுடன் நிறுத்திக் கொள்வார். உலகத்துடன் ஒட்டி வாழ்கின்றதனால் நமது அபிலாஷைகளைத் தெரிந்து திருமணம் மற்றும் சுப கருமங்களுக்கு சுவாமிஜி தமது ஆசிகளை அளிக்கின்றார். அவரவர் தத்தமது ஆத்ம லாபம் கருதி சற்கருமங்களில் ஈடுபடுகின்ற பொழுது இறைவனுடைய ஆசியும் இறை கடாட்சமும் பொழிந்து கொண்டே இருக்கும். இதற்காக ஒரு சம்பிரதாயம் எதற்கு வேண்டி இருக்கின்றது என்பதில் ஆழமான கருத்துடையவர். எதில் இல்லை என்றாலும் இறைவனுடைய திருவருள் அவர்களுடைய முயற்சியில்தான் தங்கியிருக்கின்றது என்பதை அடிக்கடி தன் பக்தர்களுக்கு வலியுறுத்துவார்.

எம் குருவின் சரீரங்களுக்கு வரும் குணங்களை நோக்கினால் விசித்திரமான ஒரு துறவி என்ற எண்ணம்தான் தோன்றும். வருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாஸனைகளெல்லாம் பஞ்சபூதங்களாலான அந்தத் தூய சரீரத்துக்குத்தான் வருகின்றது. கர்மவினையை அனுபவிக்க எடுக்கப்பட்ட சரீரம் அல்ல அத்திருவுருவம். பரோபகாரார்த்த விதமாக செய்யும் தியாகம் தான் அது. இந்த நிமிடம் கடும் சுகயீனமாகக் காணும் அதே வேளை மறு நிமிடம் சில்லென்ற குளிர்ந்த நீரில் அமிழ்ந்தி வரும் வினோத காட்சியைப் பார்த்து தமது உள்ளத் திருப்திக்கு வைத்தியப் பணியைச் செய்யும் பக்தர்கள் ஆச்சரியப்படுவதுண்டு. சில சமயங்களில் எம் குருவுக்கு ஏற்படும் கடுமையான சுகயீனம் சாதாரண மனிதனுக்கு ஏற்படுமானால் பெரும் விபரீத விளைவையே ஏற்படுத்தக்கூடியவையாகக் காணப்படும். பக்தர்கள், வைத்தியர்கள் ஆச்சரியமடைந்து இத்தகைய அற்புதத் துறவியின் ரோக ரகசியத்தைப் பற்றி அறியும் ஆற்றல் நமக்கில்லை என்பதுடன் மட்டும் நின்றுகொள்வர்.

சுவாமிஜியின் பக்தர்களில் யாருக்கேனும் சுகயீனம் ஏற்பட்டால் பல தடவைகள் ஆச்சிரம தொண்டர்களை அனுப்பி விசாரிப்பார். அந்த அன்பான விசாரணையே பக்தனுக்கு உடல் தென்பை ஊட்டிவிடும். கடுமையான சுகயீனத்தால் நினைவு தப்பிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதித்திருந்த வேளையிலும் நம் குருவை அழைத்து நா உச்சரித்துக் கொண்டிருக்கும் சில பக்தர்களின் பக்தியின் உயர்வை கூடி நிற்போர் மெய் சிலிர்த்து பார்த்ததுண்டு. அத்தகைய பெரும் கண்டத்திலிருந்து காப்பாற்றப்பட்டு சகஜ நிலையை அடைந்து நடமாடிக் கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்கள் அநேகம். இயற்கையின் கோளாறு களால் ஏற்படும் அழிவுகள் கஷ்டங்களை விட விரோதிகளால் ஏற்படும் அழிவு, ஒரு சமூகத்தின ரால் ஏற்படும் அழிவு கஷ்டங்கள் மிகவும் துன்ப கரமானவை. அத்தகைய ஓர் இக்கட்டான நிலை யில் தம்மையே கதியாக நம்பியிருப்பவர்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் எந்தவித ஆபத்துக் களும் அனர்த்தங்களும் ஏற்படாமல் காத்து அப யம் அளித்து நின்ற செயல்கள் மிகவும் அற்புத கரமானவை என்றே கூறலாம்.

தன் நாட்டிற்காக, தேசத்திற்காக பாடுபடும் தியாகிகளை தமது விசாலமான ஹ்ருதயத்தில் இடமளித்து மனம் கசிந்து பேசுவார். இறை நம் பிக்கை அற்றவர்களாகிய புராண இதிகாசங்களில் இடம் பெறும் கண்ணுவர், கபிலன் போன்றவர் களை ஏற்கும் அதே சமயம் இவர்களையும் தியாகி களாக, நெறியாளர்களாக போதமுள்ளவர்களாக ஏன் ஏற்கக் கூடாது என்பதில் வேகம் நிறைந்த வர். இதிகாச புராணங்கள் வழி மேற்கோள் காட்டி அழகாக விளக்கிப் புரிய வைப்பார் இந்த வீர புருஷர். ஒரு நாட்டின் தேசியமும், ஆன்மீக மும் ஒன்றில் ஒன்று இசைந்து இருப்பவை. இணை பிரிக்க முடியாதவை. அவை ஒன்று சேரும்பொழுது தான் அதன் வெளிப்பாடு ஒரு நாட்டிற்கு பூர ணத்துவ சக்தி பெற்றதாக மலர்கிறது என்பது சுவாமிஜியின் ஆழமான கருத்து.

சுவாமிஜியினால் உருவாக்கப்பட்ட நடேசர் ஆலயத்தின் விசேஷ பூஜை வழிபாடுகள், ஆச்சிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தில் நிகழும் விசேஷ நிகழ்ச்சிகள் இவற்றை எண்ணிப் பார்த்தால் அவை எங்ஙனம் ஆரம்பிக்கிறது, எப்படி இனிது முடிவடைகிறது என்பது அபூர்வமான காரியமாகத்தான் இருக்கும். மற்றுள்ள விடயங்களை நோக்கினால் இத்தகைய கருமங்களின் பரிபாலன சபையின் நிர்வாகம் என்ன அதன் கெடுபிடிகள் என்ன — அடுக்குகள் ஆயத்தங்கள் என்ன — ஆரவாரம் என்ன? இங்கு எதுவுமே இல்லை. இருந்த இடத்தில் இருந்து கொண்டே இரண்டொரு ஆச்சிரம பக்தர்களைக் கொண்டு அத்தனை பெரிய கருமங்களின் முழு ஆயத்தங்களையும் செய்து முடிப்பார். நாளாந்த கடமைகளுக்குள் இதற்கான ஆயத்தங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். வல்லவனுக்கு புல்லும் ஓர் ஆயுதம் என்பதை நினைவு கூரும் விதத்தில் பெரும் கருமங்களை இலகுவாக்கி மிக விமரிசையாக முடித்து வைப்பார். ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதாக இருந்தால் அந்தக்கணமே ஆச்சிரம பக்தர்களை அழைத்து அவரவர் திறமைக்கேற்ப நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்கைச் செய்து எதிர் பாராத விதத்தில் திறம்படச் செய்து விடுவார் நம் குருஜி.

சுவாமிஜிக்கும் அவர்களுடைய சிஷ்யர்களுக்களுக்கும் இடையே இருக்கும் உறவு முறை மிகவும் இனிமையானது. சிஷ்யர்கள் சுவாமிஜிக்கு சேவை செய்வதற்கு எந்த நேரத்திலும் தயாராக எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பார்கள். அதே போன்று நம் அன்புக் குருவும் தன் பக்தனுக்கு சேவை செய்ய சந்தர்ப்பங்களைப் பார்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கொண்டிருப்பார். தாம் கட்டளையிடு வதை விட தம் ஆத்மார்த்த பக்தன் உள் அன்புடன் விடும் கட்டளைகள் தாமாக வலிந்து கேட்டு மிக மகிழ்வுடன் ஏற்று செயல்படுவதில் குழந்தையாக மகிழ்வடைவார். எந்தச் சந்தர்ப்பத்திலும் தன் நிலை குறைவடையாத அந்த உத்தமருக்கும் கட்டளையிட அவருக்கு மேலானோர் யாருமில்லை. ஆயினும் பக்தனின் அன்புக் கட்டளையை செயல் படுத்துவதில் ஆனந்தமடைவார். சர்வ சராசரங்களையும் தம் குடையின் கீழ் ஆளுகின்ற பரந்தாமனே தன் பக்தனான அருச்சுனனுக்கு சாரதி சேவையில் அமர்ந்திருக்கின்றார். எந்த சூழ் நிலையிலும் அவர்களின் உயர்ந்த நிலை குறைவடைவதில்லை.

எம் அன்புக் குருவை தெய்வமாக நம்பியிருப்பவர்களுக்கு ஒரு குறையும் இல்லாமல் சுகத்தையே கொடுத்துக்கொண்டிருப்பவர் நம் குரு. தம் பக்தர்களிடத்தில் எந்தவித பிரதி பலனையும் எதிர் பாராமல் தன்னுடைய கருமசுத்தி கண்ணியத்துடன் நடந்துகொள்வார். தாம் செய்யும் காரியங்களில் எந்தவிதப் பற்றும் வைக்காத ஒருவனை அந்தக் காரியங்கள் பாதிப்பதில்லை என்பதுதான் கீதையில் கூறப்படும் உயர்ந்த தத்துவம். அவர்கள் தூற்றினாலும் சரி, போற்றினாலும் சரி எப்படி எடுத்துக் கொண்டாலும் தாம் செய்கின்ற கருமத்தை இருதய சுத்தியுடன் செய்வார். தூற்றுகிறார்கள் என்று வெறுப்பதுமில்லை. போற்றுகிறார்கள் என்று அணைப்பதுமில்லை. எந்த நிலையிலும் தம் அன்பினாலும் கருணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினாலும் ஆட்கொள்ளத் தவறுவதில்லை. எத் தகைய மனோநிலையில் செல்பவர்களும் இத் தகைய பேரன்பின் வசீகரத்தினால் ஆட்கொள் ளப்படுவதில் ஆச்சரியமில்லை. எங்கள் அன்புத் தெய்வம் எப்பொழுதும் ஆச்சிரமத்திலேயே தங்கி இருக்கின்றார் என்று கூற முடியாது. ஒரு வரு டத்தில் ஆறுமாத காலம் வனாந்தரத்திலேயே கழிந்துவிடும். சேற்றிலும், சகதியிலும் வெய்யி லிலும் கடும் பனியிலும் கழிக்கின்ற இந்தக் காலங் களில் சுவாமிஜியின் ஆத்மார்த்த பக்தர்கள் கவலையுறுவதுண்டு. இந்த உடல் சமாதிக்குப் போகின்ற வரை வயல் கருமத்தை விட்டுவிடப் போவதில்லை என்று கூறுவார் இந்த மகான். அடுத்த மூன்று மாத காலம் தேச சஞ்சாரம் செல்வதில் சுவாமிஜி கழித்துவிடுவார். தேச சஞ் சாரமாகப் புறப்பட்டால் நாலைந்து நாட்களுக்கு மேல் ஓரிடத்தில் கழிக்காமல் ஆச்சிரமம் திரும்பி விடுவார். ஆச்சிரமத்தைவிட்டு வெளியே பய ணத்தை மேற்கொள்ளும்போது சுவாமிஜியின் திருப்பாதங்களைப் பற்றி நிற்கும் ஆச்சிரம பக் தர்களிடத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தனித்தனியாக அழைப்பார். தாம் மேற் கொள்ளும் பயணத்தின் தினத்தையும், ஆச்சிர மம் திரும்புகின்ற தினத்தையும் கூறி மகிழ்ச்சியாக இருக்கும்படி தமது அன்பினால் ஆட்கொண்டு விடை பெறும் செயல் ஒவ்வொருவரின் மனத் தையும் உருக வைத்து விடும். அப்படியான சம யங்களில் ஆச்சிரமத்தில் இருக்கும் குழந்தைகளுக் கான செலவு, மற்றும் நடேசர் ஆலயம், வயல் இவற்றுக்கான கருமங்களின் ஒழுங்குகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவின்றிச் செய்த பின்புதான் தாம் புறப்படு வார். எந்த இடத்திற்குச் சென்று திரும்பினா லும் ஆச்சிரமத்திலுள்ளவர்களுக்கும், பேரன்புக் குரியவர்களாக தினந்தோறும் தரிசித்துச் செல் லும் சிஷ்யர்களுக்கும் ஒரு சிறு பொருள் அல்லது உணவு பண்டமாயினும் அழைத்து அன்புடன் அளிக்காமல் விடுவதில்லை. அவர்களும் அது எத் தகைய பொருளாயினும் சுவாமிஜியிடமிருந்து கிடைத்ததை விலை மதிக்க முடியாத வரப்பிர சாதமாக பெற்று உள்ளப் பூரிப்புடன் செல்வர். ஒரு கருமத்தை தொடங்குகின்ற நேரத்திலும் ஒரு பயணத்தை மேற்கொள்ளும் நேரத்திலும் குறித்த நேரத்திற்கு முன் ஆயத்தமாகி விடுவார். அதற் கான ஆயத்தங்களை முன்கூட்டியே செய்து அந்த நேரத்தில் எதுவித பதட்டமும் ஆரவாரமுமின் றிச் செல்லும்பொழுது ஒரு கருமத்தின் ஒழுங்கு முறையைத்தான் அது பிரதிபலிக்கும். வருடத்தில் எஞ்சிய மூன்று மாத காலம்தான் சுவாமிஜி ஆச் சிரமத்தில் தங்கி இருக்கும் காலமென்று கூறலாம். அதிலும் ஆலய கருமங்கள் கட்டட வேலைகளி லும் நாட்கள் சென்றுவிடும். எப்படியாக எங்கு சென்ற போதிலும் ஆச்சிரமம் தான் சுவாமிஜி யின் உறைவிடம். அங்குள்ள புனிதமும் அதன் புனித அலைகளும் வேறு எங்குதான் இருக்க முடி யும். இப்படியாக ஆறுமாத காலங்கள் வயல் காட்டிலும் மூன்று மாத காலம் தேச சஞ்சாரத் திலும் மூன்றுமாத காலம் ஆச்சிரமத்தில் தங்கி யிருந்து ஆலய கருமங்கள் கட்டட வேலைகளைக் கவனிப்பதிலும் கழிந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கு நாள் ஏராளமான மக்கள் சுவாமிஜியைத் தரிசித்து சென்ற வண்ணமே இருக்கின்றார்கள். பல காலம் தொடர்பு கொண்டும் இருக்கின்றார்கள். சிலர் இல்லங்களுக்கு சுவாமிஜி சென்றும் இருக்கின்றார். இருந்தும் எல்லாருடைய உள்ளங்களிலும் நிரந்தரமாக இடம்பெற்று விட்டாரென கூறிவிட முடியாது. சிலருடைய உள்ளங்களில் அவர்கள் அறியாத வண்ணமே ஓர் நிலையான இடத்தை வகித்திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. இதற்கும் முற்பிறவித் தவம் வேண்டும். வாழ்க்கையில் அஞ்ஞான போராட்டத்தின் மத்தியில் ஒவ்வொரு ஜீவனும் எதிர் நீச்சலடிக்க வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. ஒவ்வொருவரிடத்திலும் திறமை இருக்கிறது. ஆற்றல் இருக்கிறது. ஆனால் தம் பிரச்சனைகளுக்கு முடிவெடுக்கும் பக்குவம் அவர்களிடத்தில் இருப்பதில்லை. இதற்குப் படித்தவன், பெரும் பதவி வகிப்போன், பாமரன் யாருமே விலக்கல்ல. தன்னுள் உள்ள அகங்காரப் போர்வையை கழற்றி வைத்துவிட்டு சுவாமிஜியை சரணடைந்து அவர் முன் பணிவோடு நின்று ஆறுதல் தேடுகின்றான். நிம்மதியை நாடுகின்றான். இத்தகைய ஓர் காட்சியை அன்றாடம் சுவாமிஜியின் சந்நிதானத்தில் காணலாம். போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு ஒரு பார்த்தசாரதி போன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் பிரச்சனைகளுக்கு, போராட்டங்களுக்கு முடிவு கூறும் பார்த்தனாக சுவாமிஜி விளங்குவார். சலனமடைந்து, சஞ்சலப்பட்டு நிற்கும் பக்தன் தன் எண்ணங்களுக்கு, தன் செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு வலிமை தேட சுவாமிஜியின் துணையை நாடுவது வழக்கம். அவரின் அருட் சக்தியைப் பெற்று புழுங்கிய மனம் குளிர்மை பெற்று திரும்பிச் செல்வர். நாளா வட்டத்தில் தம்மை அறியாமலே அந்தத் தூய சக்தி துணை செய்கிறது என்று கருதி, அதனுடன் ஒவ்வொரு செயலையும் சம்பந்தப்படுத்தி மனத் தென்பையும் புத்துணர்வையும் பெற்று விடுவார்கள். தம் சிஷ்யர்களின் மனக் கலக்கத்தைக் கண்டு சற்றும் பொறுக்க மாட்டார் நம் குரு. இந்தப் பிரபஞ்சத்தின் சர்வ சராசரங்களின் பரம சுகத்திற்காக அல்லும் பகலும் பாடுபடும் இந்த மகாஞானி தம்மையே ஆதாரமாகப் பற்றி நிற்கும் சிஷ்யர்களின் முக வாட்டத்தைக் கண்டு எங்ஙனம் தாங்க முடியும். அவர்களை அழைத்து அன்பும் ஆதரவும் காட்டி பிரச்சனைகளை எளிதாக்கும் வண்ணம் ஆறுதல் அளிப்பார். அவர்கள் மனச் சுமையைத் தாமே ஏற்று மனச் சந்தோஷத்துடனும், முக மலர்ச்சியோடும் அனுப்பி வைக்கும் பக்குவம் சிஷ்யர்களைக் காலமெல்லாம் நினைந்து உருக வைக்கும்.

ஞானத்தில் முதிர்ந்த இந்த சக்தி வாய்ந்த விருட்சத்தின் கீழ்தான் எத்தனை எத்தனை விதமான அஞ்ஞானப் பட்சிகள் வந்து தங்கி களைப்பாறி சுகமடைந்து செல்கின்றன. அதன் குளிர்ச்சியிலும் நிழலிலும் இருந்து புத்துணர்ச்சியைப் பெறுகின்றன. சக்தி வாய்ந்த இந்த விருட்சத்தினின்றும் வெளிவரும் மூச்சில்தான் எத்தனை பட்சிகள் தம் வினை எரித்துச் செல்கின்றன. இந்த விருட்சத்தில் மலர்ந்து நிற்கும் ஞான மல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் மகரந்தத் தேனை அருந்தியபடியே சிலர் அதில் லயித்து மயங்கி நின்று விடுகின்றன. சில அங்கிருந்து எடுத்து மற்றுள்ளவற்றுக்கும் கொடுத்து பயனடையச் செய்கின்றது. எத்தகைய உயர்ந்த பணியைத்தான் இந்த ஞான விருட்சம் செய்து கொண்டிருக்கிறது. இந்த அற்புதத்தை பெரும் பேறு என்று எண்ணுவதைத் தவிர வேறு என்ன தான் கூற முடியும்,

இப் பிரபஞ்சத்தின் சகல கருமங்களிலும் தொட்டுச் செல்கின்ற இந்த ஞானி தம்மைப் பற்றி நிற்போரின் மரணத்தை முன் கூட்டியே அறிந்து தம் பக்தர்களிடத்தில் கூறிவிடுவதோடு கருவறையில் பிண்ட நிலையிலுள்ள சிசுவுக்கும் நாமத்தைச் சூட்டிவிடுவதல் ஆச்சரியமடைய என்ன இருக்கின்றது. ஒரு பக்தன் தன்னுடைய பகுத்தறிவுக்கு உட்பட்டு ஒரு கருமத்தில் தீர்மானம் எடுக்கும் பட்சத்தில் அது சரியாயிருந்தாலென்ன பிழையாக இருந்தாலென்ன அதில் குறுக்கிடாமல் அவர்களுடைய முயற்சிக்கு தடை கூறாமல் இருந்து விடுவார். அவர்களைப் பிடித்திருக்கும் கயிற்றை சிறிது தளர்த்தி, அவர்கள் வழியே விட்டுவிடுவார். கஷ்டங்கள் நேருகின்ற சமயத்தில் அவற்றினின்றும் இழுத்துக் காத்து, சீர்படுத்தி அபயம் அளித்து அனுபவத்தில் கருமங்களின் தாக்கங்களை உணர்த்தி விடுவார். தம்மையே தெய்வமாக நினைத்து துதிக்கும் பக்தர்களுக்கு வரவிருக்கும் விபத்துக்களுக்கும், கஷ்டங்களுக்கும் முன்னமே காட்டி நிற்கும் முக்காலம் உணர்ந்த நம் குரு தலையோடு போகவேண்டியவற்றை தலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகையுடன் போகக் கூடியவாறு காத்து அருள் புரிந்த சம்பவங்கள் அநேகம் பக்தர்களின் சுகத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை இந்த மகான். அகில உலகத்தின் தற்கால நிலையையும் எதிர் கால சுபீட்சத்தையுமிட்டுக் கூறிய வாசகங்களில் பொதிந்துள்ள உண்மைகள் இந்தத் தவயோகியின் தீர்க்க தரிசனத்தையே எடுத்துக் காட்டுகிறது. சுவாமிஜியின் பெருமைகளைக் கேட்டறிந்து கொண்ட பலர் அவருடைய திவ்ய தரிசனத்தை தம் புறக் கண்களால் காணும் புண்ணிய பேற்றை அடையாமலே சுவாமிஜியை மனதில் உருவகித்து பூஜித்து வழிபடுவது நம் குருதேவரின் அருளாட்சியை மேலும் உயர்த்தி நிற்கின்றது. தமது திருப்பாதங்களைத் தஞ்சமென்றடைந்த பக்தர் அருகிலிருந்தாலென்ன, தூர இருந்தாலென்ன, உலகின் எந்த மூலையில் இருந்தாலென்ன அவன் தன் கஷ்டங்களை எதிர் நோக்கி சம சுகத்துடன் வாழ சுவாமிஜியின் திருவருளைப் பெற்றுவிடுகிறார்கள். தம் பக்தர்களின் உடற் பிணியையும் பரோபகாரார்த்த விதமாக தாமே ஏற்று அனுபவித்து அந்தச் சுவடே தெரியாது தியாகச் சுடராகப் பிரகாசிக்கும் அருட் கடலின் ஆழத்தை எங்ஙனம் நாம் காண முடியும்? சுவாமிஜி அவர்களின் திருவருளும், உபதேசங்களும், கருத்துக்களும், தத்துவக் கதைகளும் மனித ஜீவியத்தின் போராட்டங்களில் பக்தர்களைப் பேணிக் காத்து வளம் படுத்தி உயர்த்திக் கொண்டிருப்பதை மறுக்கவே முடியாது. எத்தகைய தீவினையின் கர்ம தோஷத்தையும் பெற்ற பக்தனும் சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவப் பயனால் சுவாமிஜியின் தரிசனத்தையும் அருளாசியையும் பெற்றுவிட்டால் உயர்வையே நோக்கி மேலேறிச் செல்கிறானன்றி தாழ்ந்த தில்லை. கருமங்களின் நெருக்கடியான சமயத் திலும் உடல் வருந்திய வேளையிலும் கூட தம்மை அடக்கிக்கொண்டு, தம்மை உருக்கிக்கொண்டு, தம்மை தேடி வரும் பக்தனுடைய துயர் துடைக்க கால நேரமின்றி அகம் குளிர, முகம் மலர காத் திருக்கும் இந்த மகானுடைய கருணைக்கு என்ன தான் ஈடு செய்ய முடியும்.

சுவாமிஜி அவர்களின் கருணா கடாட்சம் பொருந்திய தோற்றமும் இதமானபேச்சும் அருள் வாக்குகளும் மட்டுமே போதுமானது. உலக துன் பங்களை, உலக இச்சைகளை மறப்பதற்கு சுற் றம் சூழல் மறந்த வெற்றிடமான ஒரு சுகம் தான் அந்தக் கணம் எஞ்சி நிற்கும். அந்த மகா னின் பேரன்பு ஒன்றுதான் நமக்கு ஔஷதமாக பரிணமித்து நிற்கும். அநித்தியமானவற்றிலிருந்து விடுபட்டு நித்தியமானதொரு பொருளோடு சேர்ந்துவிடத் துடிக்கும் சுதந்தர தாகம்தான் அங்கு உண்டாகும். இந்த மகா புருஷனுடைய மிக எளிமையான தோற்றத்தையும், எமக்குஅள்ளி வழங்கும் பேரன்பையும் ஆறுதல் வார்த்தைகளை யும் ஒரு கணம் நினைத்து நின்றால் எம்மை அறி யாமலே இதயம் பாறையாகக் கனத்து விடும். நெஞ்சமெல்லாம் குமுறித் தவிக்கும் கண்களில் நீர் முட்டி நிற்கும். தம்முடைய கருணையினால் ஆட்கொள்வதற்காக எடுத்த திருவுருவம் எம் மிடையே நடமாடுகின்ற அன்புத் தெய்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி அவர்களின் தரிசனத்தையும் பேரன்பையும் பெற்று அனைவரும் இம் மண்ணுலகில் பிறவி எடுத்ததின் பயனை அடைந்த புண்ணிய ஆத்மாக்கள்.

மானிட வாழ்க்கையில் ஒரு தனி மனிதனுடைய சற்கருமங்களும், சிந்தனைகளும், நடைமுறையும்தான் வாழ்க்கை பூராவும் அவன் தேடி அலைந்த செல்வம், பணம், புகழ், பதவி, செல்வம் இவையெல்லாம் சாஸ்வதமற்ற நிலையில் அர்த்தமற்றுப் போய்விடுகிறது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே வாழ்ந்து தீர வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டு விடுகிறது. இத்தகைய ஒரு நிலையில் நம்மை நாமே எவ்வளவுக்கு மேலும் மேலும் உயர்த்திக்கொள்ள முடியுமோ, அந்த அளவுக்கு இந்த மகானிடமிருந்து வேண்டியதை பெற்றுக் கொள்கிறோமோ அதுதான் நாம் பெற்ற பெரும் பொக்கிஷம். அதுதான் நாம் அடைந்த அளவிட முடியாத சொத்து. அதுதான் அடுத்தடுத்த பிறவிகளுக்கும் வழியிட்டுச் செல்லப் போகும் தொடர்ச்சங்கிலி. இப்பேர்ப்பட்ட ஒரு மகா புருஷரை நேரில் தரிசிப்பதற்கும் அவருடைய அருளாசிகளைப் பெற்றுக் கொள்வதற்கும், சந்தர்ப்பம் கிடைத்துக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் மாபெரும் பேறுபெற்றவர்களே ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவயோக சமாஜ இலவச வெளியீட்டு நூல்கள்

1. ஞான மண்டலம்
2. ஞான சுடர்
3. ஆத்ம விஜாரம்
4. ஆலயம்
5. அலையாத இன்பம்
6. கீதாஸாரம்
7. மெய்யுணர்வு
8. விஜனாமிர்தம்

வெளியிடுவோர்: ... இரா. இரவிச்சந்திரமோகன்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org